விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25

ஒலி 238 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 28 செவ்வாய்க்கிழமை (13.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## பலரது பினாமிகளே சுயேட்சை வேட்பாளர்கள்

### மகிந்த தேசப்பிரிய



(கொழும்பு)

பல சுயேட்சை வேட்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் உண்மையில் போட்டிடும் வேறு சில வேட்பாளர்களின் பினாமியாகப் பயன்படுத்தப்படுவதாக முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### 16ஆம் திகதி முதல்

## காங்கேசன்துறை - நாகப்பட்டினம் பயணிகள் கப்பல் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை துறைமுகத்துக்கும் இந்தியாவின் நாகப்பட்டினம் துறைமுகத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாகத் தனியார் கப்பல் போக்குவரத்து நிர்வாகம் 15

### ரெலோ, புளொட், ஜனநாயகப் போராளிகள்

## எதிர்க்கட்சித் தலைவருடன் இன்று கலந்துரையாடவுள்ளனர்

(கொழும்பு)

ரெலோ, புளொட், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர்கள் இன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

காலை 7.30 மணிக்கு குறித்த சந்திப்பு இடம்பெறவுள்ளது. (ம-7)

### ஆட்டோ விபத்து

## 9 மாதக் குழந்தை உட்பட மூவர் பலி

(கம்பஹா)

கம்பஹா - வேவல்தெனியப் பகுதியில் முச்சக்கரவண்டியும் லொறியும் மோதி விபத்திற்குள்ளானதில் 9 மாதக் குழந்தை உள்ளிட்ட மூவர் உயிரிழந்துள்ளனர். 02

### பலமான பாராளுமன்றம் அமைந்தால்

# சமஷ்டி முறையான தீர்வு தொடர்பில் பரிசீலனை

## ரெலோ, புளொட், போராளிகள் கட்சியிடம் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

பலம்மிக்க பாராளுமன்றம் ஒன்று அமைந்தால் சமஷ்டி முறையான அரசியல் தீர்வு தொடர்பில் பரிசீலிப்போம் என ரெலோ, புளொட், ஜனநாயகப் போராளிகள் கட்சிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### 32 பேர் தேர்தலில் போட்டி

## கட்டுப்பணம் செலுத்தல் நாளையுடன் நிறைவு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இதுவரை (12ஆம் திகதி திங்கட்கிழமை) 32 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட 15

### தமிழ்ப் பொது வேட்பாளர்

## பா.அரியநேந்திரன் கட்டுப்பணம் செலுத்தினார்



(கொழும்பு)

தமிழ்ப் பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள பா.அரியநேந்திரன் நேற்று கட்டுப்பணம் செலுத்தினார்.

பா.அரியநேந்திரன் சார்பில் 15

## தமிழர்களின் சமூகப் பிரச்சினையை ஆராய்வதற்கு நடவடிக்கை - ரணில்



(நுவரெலியா)

தமிழ் மக்களின் சமூகப் பிரச்சினையை ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நடைபெற்ற நிகழ்விலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு 02

### சகல வேட்பாளர்களும்

## சொத்து விபரங்களை வெளிப்படுத்துவது அவசியம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களும் ஊழல் ஒழிப்பு சட்டத்தின் கீழ், வேட்புமனுவைத் தாக்கல் செய்யும்போது தங்களது சொத்து விபரங்களை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிக்க வேண்டும் என ஊழல் மற்றும் கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 15

## 156 கிலோ கஞ்சாவுடன் அரியாலையில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - அரியாலைப் பகுதியில் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட 156 கிலோவுக்கு மேற்பட்ட கேரள கஞ்சாவுடன் இரண்டு சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த 39 மற்றும் 44 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். 15

## இயக்கச்சியில் ஷெல்கள்



15

நடுவு நிலை தவறாது நடுநிலை காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலாயுதன் தேவசேனாதிபதி LLB, கொழும்பு (அருள் கல்வி வட்டம்) G.C.E(O/L) க.பொ.த(சா/த) முற்றிலும் இலவசக் கருத்தரங்கு - 2024

### மாற்றியமைக்கப்பட்ட நேர அட்டவணை

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 16.08.2024 (வெள்ளி) | வவுனியா கந்தசுவாமி ஆலய மண்டபம் | மு.ப 8.00<br>பி.ப 2.00 |
| 17.08.2024 (சனி) | ஊர்காவற்றுறை பிரதேச செயலக மண்டபம் | மு.ப 8.30<br>பி.ப 2.00 |
| 18.08.2024 (ஞாயிறு) | வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி | மு.ப 8.30<br>பி.ப 2.00 |
| 19.08.2024 (திங்கள்) | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (பெண் பாடசாலை மாணவர்கள் மட்டும்) | மு.ப 7.00<br>பி.ப 2.00 |
| 20.08.2024 (செவ்வாய்) | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (ஆண் பாடசாலை மாணவர்கள் மட்டும்) | மு.ப 7.00<br>பி.ப 2.00 |
| 21.08.2024 (புதன்) | செல்வநாயகம் மண்டபம் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (கலவன் பாடசாலை மாணவர்கள் மட்டும்) | மு.ப 7.00<br>பி.ப 2.00 |

**முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்ட மாணவர்களுக்கு பிறிதொரு திகதியில் செயலமர்வு நடைபெறும். திகதி பின்னர் அறிவிக்கப்படும்.**

Tutes முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.

G.C.E (O/L) கடந்த கால வினாவிடைத் தொகுப்புப் புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.

"அனைவரும் கலந்துகொண்டு பயன் பெறவும்"

குறிப்பு:
மாணவர்கள் சீருடையுடனும் பொறுப்பாசிரியர்களுடனும் வருகை தர வேண்டும்.

**செயலமர்வின் அமைப்பாளர்கள்**

1) தலைவர் கல்வி அபிவிருத்தி ஆலோசனை அமையம் -இலங்கை திரு.வே.தேவசேனாதிபதி (சிரேஷ்ட சட்டத்தரணி) LLB 077 1133 400
2) பொதுச்செயலாளர் கல்வி அபிவிருத்தி ஆலோசனை அமையம் - இலங்கை திரு.கந்தசாமி சக்திதரன் 077 070 3360
3) திரு.ப.சுதர்சன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர் வலயக்கல்வி அலுவலகம்) 077 3144 527
(4) திரு.வே.சுந்தரேஸ்வரன் (இளைப்பாறிய பிரதி முகாமையாளர்) தேசிய லொத்தர் சபை 077 3850 841

இணை அனுசரணை கல்விக் காருணியன்

**ESP நாகரட்ணம் (கஜமுகன் ஹாட்வெயர்)**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2833

(C-971)

## நல்லை மங்கையர்க்கரசியின் விழிநீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சங்கீத பாட ஆசிரியர் திருமதி **கலைச்செல்வி ஜெயகாந்தன்** அவர்களின் அன்பு மகன்

### ஜெயகாந்தன் சிவதர்சன்



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது விழிநீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.**

(C-972)

## தமிழர்...

நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

அத்துடன் அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்படவுள்ள சமூக நீதி ஆணைக்குழுவில் தமிழ் மக்களின் சமூகப் பிரச்சினைகளை விரிவாக ஆராய சந்தர்ப்பம் கிடைக்கும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ம-7)

## 9மாத...

முச்சக்கரவண்டிச் சாரதியின் தூக்கக் கலக்கமே விபத்திற்கான காரணம் என பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## தேவை

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட இரண்டாம் வருட மாணவிக்கு யாழ் teaching Hospital க்கு அண்மையில் அறை வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு :
**076 762 1158**

(245)

## தேவை

1. யாழிலுள்ள வீட்டிற்கு பணிப் பெண் தேவை.
2. வீடு, தோட்டம் பராமரிப்பதற்கு ஆண் வேலையாளர் தேவை.

தொடர்புகளுக்கு :
**077 773 0567**

(1694)

## வீட்டு வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடொன்றில் வயோதிப ஆண் ஒருவரைப் பராமரித்தல், வீட்டுச் சமையலுக்கு உதவி செய்தல் மற்றும் இதர வீட்டு வேலைகள் செய்வதற்கு பணியாளர் உடன் தேவை.

**070 467 467 2**

(246)

## 4ம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 21.12.2004 — உதிர்வு 28.07.2020

### மணிவண்ணன் லக்ஷிகா

*திதி: நவமி*

இம் மண்ணுலகில் பிறந்த உனக்கு
மகுடம் சூட்ட நினைத்தோம் ஆனால்
இம் மண்ணுலகில் பதினாறு ஆண்டுகள்
நிறைவில் நான்காம் ஆடிச் செவ்வாயுடன்
வாழ்ந்தது போதும் என்று விண்ணுலகம்
சென்று விட்டாய்!

என்றும் உன் நினைவுகளோடு
வாழும் குடும்பத்தினர்.

(1695)

ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.
077 614 1764
குடும்பத்தினர்
(துர்க்கா [illegible] ஏழாலை)

## மரண அறிவித்தல்



தோற்றம் 1997 - 12 - 07

மறைவு 2024 - 08 - 11

### ஜெயகாந்தன் சிவதர்சன்

கொக்குவில் கிழக்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜெயகாந்தன் சிவதர்சன் அவர்கள் 11.08.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் ஜெகநாதன் ஜெயகாந்தன் (முகேஸ் அண்ணா சைவ உணவகம்) - ஜெயகாந்தன் கலைச்செல்வி (ஆசிரியர் - மங்கையற்கரசி வித்தியாலயம்) தம்பதியினரின் அன்பு மகனும் சபிதா, முகேஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெகநாதன் சரோஜினி, சுப்பையா சரோசா, பஞ்சாச்சரம் ராஜேஸ்வரி, இராமநாதன் ராமலக்ஷ்மி ஆகியோரின் அன்புப் பேரனும் ரவிச்சந்திரன் ராசாத்தி, கிருபாகரன் கமலா ஆகியோரின் அன்பு மருமகனும் ரவிதாஸ் கலாராணி(பிரான்ஸ்), சிவபாலசோதி சாரதா(லண்டன்), ரங்கராஜ் இந்துராணி(பிரான்ஸ்), ஈஸ்வரதாஸ் மேரி ஆகியோரின் அன்புப் பெறாமகனும் சிவாஸ்கரன் சசிகலா, சுதா, வாணி ஆகியோரின் அன்பு மருமகனும் ஸ்ரீகுமரன் மனோராகினி(ராஜா, டமா), சரவணன் தயாளினி, பத்மநாதன் யோகதர்சினி மற்றும் ரகுநாதன் ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (13.08.2024) இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

36/2, குமாரசாமி வீதி,
பரமேஸ்வராச் சந்தி.

(1690)

தகவல் :
குடும்பத்தினர்
077 606 2350

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளருக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை-சந்திரிக்கா

**(கொழும்பு)**

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டி யிடுகின்ற எந்தவொரு வேட் பாளருக்கும் ஆதர வளிக்கப் போவதில்லை என முன்னாள் ஜனா திபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமார துங்க தெரிவித்துள்ளார்.**

அத்தனகல்ல தொகுதி யின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடன் இடம் பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே சந்திரிக்கா இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது எதிர் வரும் ஜனாதிபதித்தேர்தல் தொடர்பான தனது நிலைப் பாட்டினை தெளிவு படுத்தும் நோக்கில் இந்த கலந்துரை யாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதி வேட் பாளர் சஜித் பிரேமதாஸ வுக்கு ஆதரவளிக்குமாறு சந்திரிக்கா விடம் கோரிக்கை முன் வைத் திருந்தனர். இந் நிலையில் நேற்றுமுன் தினம் சந்



திரிக்கா தனது நிலைப்பாட் டினை அறிவித் துள்ளார்.

இதேவேளை அத்தன கல்ல பிரதேசத்தில் செயற் படுகின்ற ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியின் உறுப்பினர் கள் தாம் விரும்பும் வேட் பாளருக்கு ஆதர வளிப்பதில் தனக்கு எந்த ஆட்சேப னையும் இல்லை என்றும் சந்திரிக்கா தெரிவித்துள் ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பழைய உறுப்பினர் என தெரி வித்த அவர் தனது ஆதரவு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மாத்திரமே வழங்கப்படும் என் றும் தெரிவித்தமை குறிப்பி டத்தக்கது. (நி-6)

# தேர்தல் களத்தில் ரொஷான் ரணசிங்க

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வுள் ளதாக முன்னாள் விளை யாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

இதேவேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசா நாயக்க, சரத் பொன்சேகா, விஜேயதாச ராஜபக்ஷ உள் ளிட்ட பலர் ஜனாதிபதித் தேர்த லில் போட்டியிடுவதற்காக கள மிறங்கியுள்ளனர்.

இந்த நிலையில்,ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி சார்பில் நாமல் ராஜ பக்ஷவும் ஜனா திபதித் தேர்தலில் போட் டியிடவுள்ளதாக உத்தியோக பூர்வ அறிவிப்பு வெளி யாகி யுள்ள நிலையில், நாட்டின் தேர்தல் களம் நாளுக்கு நாள் தீவிர மடை கின்றது.

இவ்வாறான நிலை யிலேயே முன்னாள் விளை



யாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தானும் தேர்தலில் களமிறங்கவுள் ளதாக அறி வித்துள்ளார்.

மேலும், இலங்கை கிரிக் கெட் சபை தொடர்பில் கடந்த காலங்களில் முன்வைக்கப் பட்ட குற்றச்சாட்டுக்கள் மற் றும் முறுகல் நிலை காரணமாக ரொஷான் ரணசிங்க விளை யாட்டுத்துறை அமைச்சுப் பத வியில் இருந்து ஜனா திபதி ரணில் விக்கிரம சிங்க வினால் கடந்த வருடம் பதவி விலக் கப்பட்டார்.

அதன் பின்னரான நாட் களில் அர சியல் மேடை களில் ரணில் விக்கிரம சிங் கவை, முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க காட்டமாக விமர்சித்து வந்தமை குறிப்பி டத்தக்கது. (நி-6)

# பெரமுன வெல்வது சாத்தியமற்றது

## மகிந்தவின் சகா பகிரங்கம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனவை இனிஎவராலும் கட்டி யெழுப்ப முடியாது. எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற வேண் டும். ஏனெனில் அவர் வெற்றி பெற்றால் தான் நாடு வெற்றி பெறும் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் விமல வீர திஸாநாயக்க தெரி வித்தார்.

அம்பாறையில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற மக்கள் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப் பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது, நாடு மிக மோசமான பொரு ளாதார நெருக்கடியை எதிர் கொண்டிருந்த வேளையில் தற்போது வீர வசனம் பேசுபவர்கள் எவரும் அரசாங் கத்தை பொறுப் பேற்கவில்லை.

நாடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த போது நிபந்தனை விதித் துக் கொண்டிருந்தார்கள். ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் எதிர் காலத்தை கருத்திற்கொள்ளாமல் நாட்டை பொறுப்பேற் றார்.

குறுகிய காலத்தில் நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பொதுஜன பெரமுன வெற்றி பெற்றால் மகிழ்ச்சியடைவேன். ஆனால் அது நடைமுறைக்கு சாத்திய மற்றது.

பொதுஜன பெரமுனவை இனி எவராலும் கட்டி யெழுப்ப முடியாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வெற்றி பெற வேண்டும். அவர் வெற்றி பெற்றால் தான் நாடு வெற்றி பெறும்.

சஜித் பிரேமதாஸ அல்லது அநுரகுமார திஸா நாயக்க ஆகியோரில் எவர் ஆட்சிக்கு வந்தாலும் தற் போதைய பொருளாதார கட்டமைப்பை தொடர வேண்டும் என அவர் தெரி வித்தார். (நி-6)

# இழப்பீடு வழங்குமாறு விவசாய அமைச்சர் பணிப்பு

(கொழும்பு)

சிறுபோகத்தில் ஏற்பட்டுள்ள பயிர்ச் சேதங்களுக்கு உடனடியாக நட்ட ஈட்டை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர பணிப்புரை விடுத் துள்ளார்.இம்மாதம் பயிர்ச் சேதங்கள் பதிவா கியுள்ள பகுதிகளுக்கு இந்த இழப் பீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு விவசாயத்திணைக்களத் துக்கு அவர் பணிப்புரை விடுத் துள் ளார். தற்போது பல பகுதி களிலும் சிறுபோக அறுவடை நடை பெற்று வரும் நிலையில், அறுவடை நிறை வடைந்ததன் பின்னர் பயிர்ச் சேதத்திற்கான தொகையை வழங்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார். (நி-6)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 01 . 10 . 1941

மறைவு 14 . 07 . 2024

கடந்த 14.07.2024 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர். வைரமுத்து தவரத்தினம்

(ஓய்வு நிலை உதவி முகாமையாளர்-மக்கள் வங்கி)

அவர்களின் சபிண்டீகரண கிரியைகள் இன்று 13.08.2024 செவ்வாய்க்கிழமை நடைபெற்று ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு ஆறுதல்களை நேரிலும், தொலைபேசியூடாகவும் தெரிவித்தவர்கள் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்கள், மலர் வளையங்கள், பதாதைகள், துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டவர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. (c-970) தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித திரேசா பெண்கள் கல்லூரி வலைப்பந்தாட்ட போட்டியில் சம்பியன்



வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் சம்பியனானது சென் திரேசா பெண்கள் கல்லூரி.

கிளிநொச்சி மாவட்ட வலைப் பந்தாட்ட சங்கம் நடத்திய 16 வயதுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான அமரர் இ.விக்கினேஸ்வரமூர்த்தி ஞாபகார்த்த வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டி கிளிநொச்சி பொது விளையாட்டு மைதான உள்ளக அரங்கில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் கிளிநொச்சி பரந்தன் இந்து மகா வித்தியாலயம் மற்றும் புனித சென் திரேசா பெண்கள் கல்லூரி என்பன மோதிக் கொண்டன. 22:18 என்ற கணக்கில் புனித திரேசா பெண்கள் கல்லூரி பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தை வீழ்த்தி முதல் இடத்தைப் பெற்று சம்பியன் ஆனது.

இரண்டாம் இடத்தை பரந்தன் இந்து மகா வித்தியா லயமும் மூன்றாவது இடத்தை முட்கொம்பன் மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டது.

மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தின் உபதலைவர் சந்தனம் பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளீதரன், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் எம்.மோகனதாஸ், யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி, கரைச்சி மற்றும் பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர். (நி-6-316)

# உடையார்கட்டு மகாவித். ஆதிக்கம்



முல்லைதீவு வலயத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள் நிகழ் வுகள் கடந்த கிழமை முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

முல்லைத்தீவு வலயத்திற்கு உட்பட்ட அனைத்து பாடசாலைகளும் பங்குபற்றினர்.

இதில் பெரு விளையாட்டுகள் மற்றும் மெய்வல்லுனர் போட்டிகளின் அடிப்படையில் உடையார்கட்டு மகா வித்தியாலயம் 271 புள்ளிகளை பெற்று முதலிடத்தையும் பாரதி வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் வித்தியானாந்தா கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6-90)

## கண்ணீர் அஞ்சலி

கிளி/பளை மத்திய கல்லூரியின் கல்விசாரா ஊழியரான திரு.சு.யோகதாஸ் அவர்களின் பாசமிகு மாமியாரான

**அமரர் சந்தியாப்பிள்ளை நீற்றாம்மா**



அவர்கள் 11.08.2024 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
கிளி/ பளை மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) (1696)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3194

**தனுஷன்**

காதலி: எனக்கு வேறு ஒருவரோட நிச்சயம் ஆயிடுச்சி.....

காதலன்: எனக்கு முன்பே தெரியும்

காதலி: எப்படி?

காதலன்: நேத்து ராத்திரி குடுகுடுப்பக்கரான் வந்து, எனக்கு நல்ல பொறக்குதுன்னு சொன்னான்...

**டஜின்**

50 திருமணமான ஆண்கள் கூட்டத்தில்'மனைவியிடம் யாரெல்லாம்அடிவாங்கியவர்கள் கை தூக்குங்கள்" என்று கேட்கப்பட்டது... ஒருவர் தவிர மற்ற எல்லோரும் கைகளை உயர்த்தினார்கள்... கை தூக்காத அந்த கணவரை அழைத்து 'பரவாயில்லையே உங்கள் மனைவி அனுசரணையானவர் போல, நீங்கள் மிகவும் அதிஷ்டசாலி" என புகழ்ந்தனர்... அதற்கு அவர் சொன்னார்... 'அடப்போங்கப்பா, நீங்க வேற வயித்தெரிச்சல கிளப்பிகிட்டு நேற்று வாங்கின அடியில கை தூக்க முடியல....

**சிந்துஷன்**

ஸ்பெஷல் புரோட்டானு போட்டிருக்கீங்க ஸ்பெஷலுக்கும் சாதாவுக்கும் என்ன சார் வித்தியாசம்?



ரெண்டுக்கும் ஒரே ஒரு நாள் தான் வித்தியாசம்.....

**விமல்**

அந்த ஆளு போலி அதிகாரின்னு எப்படி கண்டுபிடிச்சாங்களாம்...? எந்தத் துறைல வேலை செய்யறீங்கன்னு கேட்டதுக்கு...



மயிலாடுதுறைன்னு சொன்னாராம்....

**துஷா**

கணக்கு வாத்தியார்: 100 கிலோ = 1 டன் என்றால்... 300 கிலோ எத்தனை டன்?



பையன்: டன் டனா டன்!

**தன்விகா**

மனைவி கணவனுக்கு சப்ரைஸ் கொடுக்க நினைத்து, கிச்சனுக்கு போய், புது நம்பரில் இருந்து ஃபோன் செய்தாள்?

மனைவி: "HELLO DARLING"

கணவன்: "அப்புறம் CALL பண்ணு செல்லம், இப்போ அந்த பிசாசு கிச்சன்ல தான் இருக்கு"

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீதி அமைச்சராக அலிசப்ரி நியமனம்



(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார்

பாராளுமன்ற உறுப்பினர் விஜேயதாச ராஜபக்ஷவின் இராஜினாமாவை அடுத்து ஜனாதிபதியால் இந்த பதவிப் பிரமாணம் வழங்கப்பட்டுள்ளது.(நி-6)

## வேட்புமனுவில் கையொப்பமிட்டார் அநுர



(கொழும்பு)

எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசா நாயக்க வேட்பாளர் வேட்பு மனுவில் கையொப்பமிட்டார்.

நேற்று திங்கட்கிழமை முற்பகல் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் வேட்பு மனுவில் கையொப்பமிட்டார்.

இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின்பொதுச் செயலாளர் வைத்தியர் நிஹால் அபேசிங்க, மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா உள்ளிட்ட தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

(நி-6)


# மணிவிழா வாழ்த்து



திருமதி.

**ரதிரஞ்சிதம் பகீரதன்**

(S.L.T.S-I, spl Trained primary)

**சேவை விபரம்**

- யா/வண்ணை ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாலயம் (29.11.1989– 02.02.1993)
- யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை (03.02.1993– 31.12.1994)
- யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி (01.01.1995– 11.05.2010)
- யா/கோண்டாவில் R.C.தமிழ்க் கலவன் பாடசாலை (12.05.2010– 31.12.2018)
- யா/கோண்டாவில் C.C. தமிழ்க் கலவன் பாடசாலை (01.01.2019– 04.10.2022)
- யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி (05.10.2022– 12.08.2024)

எமது பாடசாலையில் ஆரம்பக் கல்வி ஆசிரியராக கடமையாற்றி 12.08.2024 இன்று அகவை அறுபதில் தடம் பதிக்கும் மணிவிழா நாயகியை நோய் நொடியின்றி ஆரோக்கியமாக நீண்டகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

(1687)

Congratulations

நலன்புரிக் கழகம்,
யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி.





## நல்லைக் கந்தவேளே!

நித்தமுந் தெளிவோடு நினைநினைத் துருகுவோர்
நெஞ்சிலே துஞ்சியருள்வாய்
சித்தமு முனையன்றி வேறொன்று மில்லையே
சிந்தனையில் விஞ்சியெழுவாய்
அத்தனே முத்தனே சித்தனே யுனையன்றி
ஆரெமைக் காக்கவல்லார்
அத்தனை மேன்மைகொள் ளானந்த சொரூபனே
அருநல்லைக் கந்தவேளே!

**கலாபூஷணம், சந்தக்கவிஞர்**
**நவ.பாலகோபால்.**

## அரோகரா சொல்வமடி ஞானத்தங்கமே!

அருள் வேலன் வீதியிலே வருகிறானடி
ஞானத்தங்கமே!
அரோகரா சொல்வமடி வாடி ஞானத்தங்கமே!
பொருள் பண்டம் தருவானடி நல்லூரான்
ஞானத்தங்கமே!
பொறுமையுடன் வீதியை வலம் வந்து
கும்பிட்டாலடி!
எழில் வள்ளி தெய்வானையுடன் வருகிறானடி
ஞானத்தங்கமே!
எங்களுக்கும் மணவாழ்வு விரைவில்
கிடைக்குமடி ஞானத்தங்கமே!
தமிழ் வடிவாய் வருகிறானடி நல்லூரான்
ஞானத்தங்கமே
தாள் பணிந்து அரோகரா சொல்வமடி
ஞானத்தங்கமே!

**மதுரகவி**

# இராசிபலன்

13.08.2024
ஆடி 28, செவ்வாய்க்கிழமை
அட்டமி காலை 6.09 மணிவரை

விசாகம் முற்பகல் 8.23 மணிவரை
சுபநேரம்- 10.35-12.05 மணிவரை
இராகுகாலம்-3.05-4.35 மணிவரை

அட்டமி-நவமி
சந்திராஷ்டமம்
ரேவதி.

**வளவன்**



ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் நிலை ஏற்படலாம், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், ரோக பயமுண்டு.



அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.



எதிர்பாராத தனவரவுகள் இல்லம் வந்து சேரலாம், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வாக்கு மேன்மையுண்டு.



பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், போசன சுகமுண்டு.



ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், செய்தொழில் மேன்மையுண்டு, சுற்றத்தவர் வரவால் சுகம் கூடும் நாள், காரிய அனுகூலமுண்டு.



சிந்தித்துச் செயற்பட்டுச் சிறப்புக்களைக் காணும் நாள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும், செய்திகள் வந்து சேரலாம், பொழுது போக்கு விடயங்களில ஆர்வம் கூடும்.



குடும்பத்தினர் உங்களின் குணமறிந்து நடந்து கொள்வர், விரும்பிய காரியம் விரும்பியபடியே கைகூடும், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.



வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், உற்சாகமான நாள்.



தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், உடல் நலன் சீராகும், செய்தொழில் மேன்மையுண்டு, வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.



எடுத்த காரியங்களை எளிதில் முடித்துக் கொள்வீர்கள், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.



திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.



எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும்.

நியாயம் இல்லாத எந்த வழியிலும் பொருளைச் சேர்க்காதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களக்கற்கையும் தொண்டைமானாறு வெளிக்கள நிலையமும்

ஞானமணி
இரட்ணசிங்கம்
ஆசிரிய கல்வியியலாளர்

02

இறுதியில் பல்லூடக எறியீ (power point presentation) மூலம் இலத்திரனியலில் கற்றவை அனைத்தும் அளிக்கை செய்து விளக்குவதன்மூலம்பிள்ளைகளின் ஐயங்கள் தீர்க்கப்படுகின்றன.

முடிவில் "மோகன் சுவாமி" யின் சாப்பாடு என்றதும் மாண வர்களின் உணவுக் கால்வாய்த் தொகுதியில் நொதியங்கள் தமது வேலையை ஆரம்பிக்கத் தொடங்கி விட்டன.

சில வீடுகளில் மாமிச உண வென்றால் சமையல் நடக்கும் போதே வீட்டுக்காரர்களுடன் கதைக்க முடியாது.தெறிவினைச் செயற்பாட்டினால் வாயடியில் தூவானம் பறக்கும்.( உணவு வாசத்திற்கே நொதியச் சுரப்பு ஆரம்பித்தல்)

பாடசாலைப் பிள்ளைகள் என் றால் மோகன் ஐயாவுக்கு அலாதிப் பிரியம். அறுசுவை உண்டியை வடை, பாயாசத்துடன் வழங் குவார். சாப்பாட்டினைப்பற்றிய அவர்களின் உணர்வுகளை அவர் களின் உடல் மொழி மூலமே அறிந்து விடும் ஆற்றல் உள்ளவர். தனது செயற்பாடுகளும் ஓர் கற்றல் நடைமுறையாக அமைய வேண் டும் என எண்ணுவார் போலும். ஏனெனில் மாணவர் திரும்பும் போது பிரகாசமான கண்களுடன் "சுப்பர் சாப்பாடு சேர்" என்றவாறு மகிழ்வை வெளிக்காட்டுவர்.

ஆறு, கடல், இரண்டு பாலங் கள், கோயில், ஆச்சிரமங்கள், உணவு மண்டபங்கள்,கீழ்த்தளம் உட்பட மூன்று மாடிகளில் உயர்ந்து நிற்கும் கல்விச்சாலை இவற்றால் ஏற்படும் புலக்காட்சி யின் வலிமை பிள்ளைகளின் மூளையில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றி கற்றுணர்ந்தார்க்கு நன்கு தெரிந்துள்ளது.அது தான் இடத் தெரிவு இவ்வாறு அமைந் துள்ளது.



இதற்கு இடம் தானமாக வழங் கிய அகிலாண்டேஸ்வர குருக்கள் போற்றுதற்குரியவர்.(ஒரு பிடி நிலத்திற்காக சொந்தச் சகோ தரர்களே அடிபடும் காலம் இது).

ஒரு சில கற்றுக் குட்டிகள் இங்கு நடைபெறுகின்ற எவற்றையுமே ஒரு போதும் அவதானிக்காமல் வல்லை வெளியில் நின்று கட்ட டத்தினைப் பார்த்து விட்டு "ஐயோ அநியாயமாக வளம் வீணாகின் றதே" என்று சப்பை கொட்டுவதும் உண்டு.

உணவின் பின் வழங்கப்பட்ட ஒரு மணிநேர ஓய்வு பிள்ளைக ளுக்கு தமது புதிய அநுபவங் களைப் பகிர்ந்து கொள்ளவே போத வில்லை. (பிரதிபலிப்புச் சிந்தனை யும் வெளிப்பாடும்) அதற்கிடையில் அவர்களின் நேரம் நிறைவடைந்து உயிரியல் பாடப்பகுதியின் செயற் பாட்டிற்காக நான்கு குழுக்களாகப் பிரிந்து நான்கு ஆய்வுகூட அறை களினுள்ளும் செல்கின்றனர். உயிரியலில் நடைபெறுபவற்றினை இன்னொரு சந்தர்ப்பத்தில் ஆராய் வோம்.

'நாங்கள் இன்று தான் சேர் சகபாடிகளுடன் ஒன்றாக கற்றல், கற்பித்தற் செயற்பாட்டிற்காக தின மொன்றைக் கழிக்கின்றோம்.' நாமாக உபகரணங்களைக் கையா ளுகை செய்கின்ற சந்தர்ப்பம் மகிழ் வானது.

'விஞ்ஞானபாடத்தில் இலத்திர னியல், மின்காந்தத் தூண்டல் என்பவை கடினமாக எமக்குத் தோன்றுவதற்கு காரணம் இதுதான்.








இவ்வளவு உபகரணங்களைப் பயன்படுத்தி செய்து பார்த்துக்கற்க வேண்டிய விடயங்களை கரும் பலகையை மட்டும் நம்பிக் கற்க வெளிக்கிட்டால் எவ்வளவு கடினம். எமக்குக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் எவ்வளவு கஷ்டப்பட வேண்டும். நாமும் விரைவில் களைத்து விடு கின்றோம்.

இலகுவாக இருப்பதற்கு இன் னுமொரு காரணமும் உண்டு. அடிக்கடி கற்பித்தல் முறைகளை மாற்றி சலிப்பில்லாமல் செயற்படு கின்றமையும் மாணவர் மனதை கவனக் கலைப்பான்கள் பால் அலை வதைத் தடைசெய்து விடுகின்றது.

'இடையிடையே நுண்முறைக் கற்பித்தல் நுட்பங்கள் இடை வெளி களைக் குறைத்து இலகுவாகக் கற்றலைத் தொடர வைக்கின்றது.'

'குறைந்தது இரண்டு பேர் ஒரே நேரத்தில் பயிலமர்வினைகொண்டு செல்வதால் செயற்பாட்டையும் பாடத் தையும் காரண காரிய தொடர்புடன் விளங்கிக் கொள்ள முடிகின்றது.'

'எங்கள் குழுவினர் அருகில் நின்று தனித்தனியாக எங்களைக் கவனித்து உதவுவதால் மிகத் தெளி வான விளக்கத்தினைப் பெறவும் எமது செயற்பாட்டை ஊக்குவித்தல் செய்யும் முறைமையினால் உற்சா மாகக் கற்கவும் முடிகின்றது.'

'நாம் குழுவாகச் செயற்படுவதால் வெட்கமில்லாமல் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவு பெற முடிகின்றது.'
'ஒவ்வொரு கற்றற் செயற்பாட்டின் இறுதியிலும் உங்களின் மீள வலியுறுத்தல் முறைமை கற்றலை இலகுபடுத்துகின்றது'

முதல் நாளின் இறுதியில் பிள் ளைகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டு பலம் மற்றும் பல வீனம் பற்றி அறிய முயற்சித்த போது மாணவர் குறிப்பிட்டவற்றில் விவ ரணங்களில் கற்றல் கற்பித்தல் சம் பத்தப்பட்ட சில குறிப்புகளே இவை.

மாலையில் சூழற் தொகுதி பாடம் புது உலகை நோக்கினாற்

போல் கடலைக்கண்டதும் வெள்ளை ஆடையுடன் கடற்கரையை நோக்கி ஓடுகின்ற பிள்ளைகள் எவ்வளவு பாவம். ஐந்து மணிநேரம் அடைத்து வைத்து, என்னையும் கரும் பலகையையும் மட்டும் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். அங்கால இங்கால தலை திருப்பக் கூடாது. ஆனால் படிப்பிக்கின்ற பாடம் சூழற் தொகுதி. அதுவும் கடற்கரைச் சூழல்.

மாணவர்கள் எப்போதும் மாண வர்கள் தானே. கடலைக்கண்டதும் அடைத்து வைத்த கோழிக் குஞ்சு களைத் திறந்து விட்டால் எப்படிப் பறக்குமோ அப்படிக் கடலை நோக் கிப் பறக்கின்றார்கள்.

முன்னரே எதிர்பார்த்திருந்த படியால் ஆசிரியர்கள் திணற வில்லை.

"இந்த அட்டையையும் (work card) கொண்டு செல்லுங்கள்" என்ற அந்த விரிவுரை யாளரின் சொல்லுக்குக் கட்டுப்பட்ட மாண வர்கள் அட்டையை வாங்கி குழு வேலைக்கு ( group acti vity) தயாராகின்றார்கள்.

கடற்கரைச் சூழற்றொகுதியில் (eco system) காணப்படக் கூடிய விலங்கினங்கள், தாவரங்கள், அதில் செல்வாக்குச் செலுத்தும் பௌதிகக் காரணிகள் கழிமுகம் பற்றிய விளக்கம், தொண்டை மானாற்றிற்கும் பொன்னியின் செல் வனுக்குமான தொடர்பு, கடற்க ரையில் சேகரிக்கப்படும் உயிர்ச் சுவட்டுச் சான்றுகள், இங்குள்ள நன்னீர்ச் சூழற் றொகுதி, இங்கு காணப்படக்கூடிய இரண்டு வகைப் பாலங்களினதும் தேவைப்பாடு, கனிப் பொருட் சக்கரங்களின் செயற் பாட்டில் இக்கடற்கரைச் சூழலின் பங் களிப் பு,நவரத்தினசாமியின் சிலைபற்றிய வியாக்கியானம். போன்ற பல வினாக்களுக்கான விடைகளைத் தேடும் முயற்சி அவர்களின் கடலில் நனையும் ஆசைக்கு தடைபோடுகின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமான வரித்துறை எனும் போர்வையில் மோசடி

(கொழும்பு)

உள்நாட்டு இறைவரி திணைக்கள அதிகாரிகள் எனும் போர்வையில் வர்த்தக நிலையங்களில் பண மோசடிகள் இடம்பெறுவதாக தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வருமானத்துறை அதிகாரிகள் எனும் போர்வையில் பணம் வசூலிக்க வருபவர்களிடம் பணம் கொடுக்க வேண்டாமென திணைக்களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

வருமானத்துறை அதிகாரிகளாக போலி வேடம் தரித்து வருகை தரும் நபர்களை கைது செய்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக இறைவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. அனைத்து வகையான வரிகள் தொடர்பான நிலுவைத் தொகைகள் உரிய முறையில் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு மாத்திரமே வசூலிக்கப்படும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.வரி செலுத்துவதில் ஏதேனும் சிக்கல்கள் இருப்பின் அது குறித்து அறிவிக்குமாறும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மக்களை கேட்டுக் கொண்டுள்ளது. (நி)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று செவ்வாய்க் கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

மாலை 6.45-7.10 மணி வரை இடம்பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு-சி.ஜேசுதன், வயலின்-ப.சியாமகிருஸ்ணா, மிருதங்கம்-க.நந்தகுமார், கடம்-ஸ்ரீ.நிதர்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து 7.15-8.05 மணிவரை இடம்பெறவுள்ள இசையரங்கினை பாட்டு-பாலமுருகன் தரங்கினி, வயலின்-இ.நிரோஜன், மிருதங்கம்-வ.ரமணசர்மா, கஞ்சிரா-ர.லயசர்மா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி-6)

# சீனத் தூதுவரை சந்தித்த சுமந்திரன், சாணக்கியன்



(கொழும்பு)

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரனும், இரா.சாணக்கியனும் இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ சென்கொங்கை சந்தித்து கலந்துரையாடினர்.

கொழும்பிலுள்ள சீனத் தூதரலயத்தில் நேற்று குறித்த சந்திப்பு நடைபெற்றது.

தற்போதைய முக்கிய நிகழ்வுகள் சம்பந்தமாகவும் வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களின் அபிலாஷைகள் சம்பந்தமாகவும் சினேகபூர்வமாக கலந்துரையாடினோம் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (நி-6-33)

# பசுந்தோகை நூல் வெளியீடு

(சாவகச்சேரி)

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த வெளியீடாகிய பசுந்தோகை சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை புதன் கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி அறி வியல் நகரில் அமைந்துள்ள விவசாய பீடத்தில் இடம்பெறவுள்ளது.

விவசாய பீட 31 ஆவது ஆண்டு அணியினரின் ஏற்பாட்டில் 19ஆவது இதழாக குறித்த நூல் வெளியாகின்றமை குறிப்பிடத்தக்கது.(நி-6-30)

# இளவாலையில் இடம்பெற்ற இலவச மருத்துவ முகாம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இலவச மருத்துவமுகாம் இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் பங்கேற்புடன் நடைபெற்ற குறித்த மருத்துவ முகாமில் குருதிய முக்கம், உயரத்திற்கேற்ற உடல் நிறை, குருதியில் சீனி யின் அளவு, பற் பரிசோதனை உள்ளிட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, குருதிச் சோகை, தைரொய்டு நோய்கள் போன்ற பிற தொற்றா நோய்களுக்கான அறிகுறிகள் அடையாளம் காணப்பட்டதோடு, உரிய மருத்துவ சிகிச்சைகள் மற்றும் மருத்துவ ஆலாசனைகளும் வழங்கப்பட்டன.



மருத்துவர் பேரானந்தராஜா உள்ளிட்ட மருத்துவர் குழாமினர் மருத்துவ முகாமில் உரிய மருத்துவ ஆலோசனை கள் மற்றும் வழிகாட்டல்களை வழங்கியிருந்ததோடு, இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் செயற்பாட்டாளர்கள் குறித்த மருத்துவ முகாமில் தங்கள் தன்னார்வ பங்களிப்புகளையும் வழங்கியிருந்தனர். (நி-6)

## பின்முற்றாகும் தீர்வை (Decree Nisi)
## கல்முனை மாவட்ட நீதிமன்றத்தில்

| | |
|---|---|
| நீதிமன்றம் | கல்முனை மாவட்ட நீதிமன்றம் |
| வழக்கு இலக்கம் | DCK/D/2447/2023 |
| வழக்காளி | தவராசா ராசவதனி<br>இல.175, மத்திய வீதி, சேனைக்குடியிருப்பு-1B கல்முனை |
| எதிராளி | இரத்தினசிங்கம் சிறிகரன்<br>மானிப்பாய் வீதி, கட்டுடை<br>மானிப்பாய்-மேற்கு, யாழ்ப்பாணம் |
| தீர்ப்பு வழங்கப்பட்ட திகதி | 2024ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி. |
| வழங்கப்பட்ட நிவாரணம் | 1. வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 2013.01.06ஆம் திகதி பொது திருமணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக நடைபெற்ற சட்டபூர்வ பதிவுத் திருமணத்தை குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் பிரிவு 608 (2) (b) இன் பிரகாரம் இரத்து செய்து தீர்ப்பு வழங்கப்பட்டது.<br>2. கட்டளையின் பிரகாரம் பின்முற்றான தீர்வை பதிவதற்கு அனுமதிக்கும் கட்டளையும் தீர்ப்பும் வழங்கப்பட்டது.<br>3.பின்முற்றான தீர்வையை எதிராளிக்கு சேர்ப்பிப்பதற்கு அனுமதிக்கும் கட்டளையும் தீர்ப்பும் வழங்கப்பட்டது.<br>4. திருமண நீக்கத்தின் பின் வழக்காளி தனது கன்னிப்பெயரை பாவிக்க உரித்துண்டென்ற கட்டளையும் தீர்ப்பும் வழங்கப்பட்டது. |
| வழக்குச் செலவு எதுவும் இருப்பின் | ஆம் |
| கல்முனை மாவட்ட நீதிமன்ற கௌரவ நீதிபதியின் கையொப்பம் | |
| உத்தியோகபூர்வ முத்திரை | DISTRICT JUDGE DISTRICT COUR KALMUNAI |

(1688)

## Decree Nisi
## DISTRICT COURT OF KALMUNAI

| | |
|---|---|
| Court | District Court of Kalmunai |
| Case No | DCK/D/2447/2023 |
| Plaintiff | Thavarasa Rasavathani<br>No.175, Central Road,<br>Chenaikkudiyiruppu-1B Kalmunai-03 |
| Defendant | Iraththinasingam Sirikaran<br>Manippay Road, Kaddudai,<br>Manippay-West Jaffna |
| Date of Judgement | 16th day of May, 2024 |
| Releifs granted | 1. It is hereby ordered and decreed that the Marriage between the plaintiff and the defendant conducted on 2013.01.06 under General Marriage ordinance is hereby dissolved according to section 608 (2) (b) of Civil Procedure Code<br>2. It is further ordered and decreed to enter the decree nisi<br>3. It is further ordered and decreed to serve the decree nisi to the defendant<br>4. It is further ordered and decreed that the plaintiff is entitled to use her maiden name. |
| Cost, if any | Yes |
| Signature of Hon. District Judge of the District Court of Kalmunai | |
| Official Seal | DISTRICT JUDGE DISTRICT COUR KALMUNAI |

To the above named Defendant.
Note: Any application to set inside this decree must be made within 14 days of service hereof.

'By order of Court'

Date:

Registrar,
District Court,
Kalmunai

(1688)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# இந்தியக் கோயிலில் சன நெரிசல்

## 7 பேர் உயிரிழப்பு



(டில்லி)

இந்தியாவின் பீகார் மாநில ஜெகானாபாத் மாவட்டத்தின் கோயில் ஒன்றில் ஏற்பட்ட நெரிசலில் 7 பேர் உயிரிழந்துள்ளதுடன் 35 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பீகாரின் ஜெகனாபாத் மாவட்டத்தில் உள்ள மக்தும்பூர் பகுதியில் பாபா சித்தநாத் கோயிலில் இந்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருந்த நிலையில், திடீரென ஏற்பட்ட நெரிசலின் போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. (நி-6)

# ஈரானின் புதிய வெளியுறவு அமைச்சராக அபாஸ் அராக்சி என்பவர் நியமனம்

(டெஹ்ரான்)

ஈரானின் புதிய வெளியுறவு அமைச்சராக அபாஸ் அராக்சி என்பவரை அந்நாட்டு ஜனாதிபதி மசூத் பெஸஸ்கியன் ஞாயிற்றுக்கிழமை அன்று நியமித்துள்ளார்.

இதை ஈரான் நாட்டு பாராளுமன்ற நாயகர் அந்நாட்டின் 'ஸ்டுடண்ட் நியூஸ் நெட்வொர்க்' என்ற ஊடகத்தளத்தில் அறிவித்தார்.

"இன்று முதல் அடுத்த வாரக் கடைசிவரை பாராளுமன்ற அமைப்புகள் அமைச்சர்களாக பரிந்துரை செய்யப்பட்டவர்களின் திட்டங்களை பரிசீலிக்கத் தொடங்கும்," என்று பாராளுமன்ற நாயகர் முகம்மது பாக்கர் கலிபஃப் தெரிவித்தார்.



இந்நிலையில் ஜனாதிபதி பெஸஸ்கியனின் அமைச்சரவைக்கு பாராளுமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியுறவு அமைச்சராக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அராக்சி அனுபவமிக்க அரசதந்திரி என்று கூறப்படுவதுடன் இவர் 2013ஆம் ஆண்டிலிருந்து 2021ஆம் ஆண்டுவரை ஈரான், உலக வல்லரசுகளுக்கு இடையிலான அணுவாயுதப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் பின்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு ஈரானியத் தூதராகப் பணியாற்றியுள்ளார் என்றும் ஆசிய-பசுபிக் வட்டாரத்துக்கான ஈரானின் துணை வெளியுறவு அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார் என்றும் கூறப்படுகிறது. (நி-6)

# சரிந்து விழுந்த குப்பைமேடு 18 பேர் உயிரிழப்பு

(கம்பாலா)

உகாண்டா தலைநகர் கம்பாலாவில் குப்பை மேடு சரிந்து விழுந்ததில் 18 பேர் உயிரிழந்தனர்.

குறித்த பகுதியில் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழை காரணமாக இந்தக் குப்பை மேடு சரிந்துள்ளதாகவும் அதற்கு அருகில் உள்ள வீடுகள் புதையுண்டுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் பலர் இதில் சிக்குண்டுள்ள நிலையில் மீட்புப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் இதுவரையில் 18 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி-6)



# சென்.மார்ட்டின் தீவை அமெரிக்கா கோரியது வழங்கியிருந்தால் ஆட்சியில் நீடித்திருப்பேன்

## ஷேக் ஹசீனா



(டாக்கா)

அமெரிக்காவின் சதியால் ஆட்சியை இழந்ததாக பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்துள்ளார். பங்களாதேஷில் இட ஒதுக்கீடு நடைமுறையை எதிர்த்து கடந்த ஜூன், ஜூலையில் மாணவர் சங்கங்கள் போராட்டம் நடத்தின.

இது கலவரமாக மாறியதால், கடந்த 5 ஆம் திகதி பிரதமர் பதவியை இராஜினாமா செய்த ஷேக் ஹசீனா, இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார்.

இந்நிலையில், இது தொடர்பாக அவர் அளித்த நேர்காணலில் கூறியதாவது,

பங்களாதேஷிற்கு சொந்தமான சென் மார்ட்டின் தீவைதங்களிடம் ஒப்படைக்க அமெரிக்கா வலியுறுத்தியது. அந்த தீவை அமெரிக்காவுக்கு வழங்கியிருந்தால், ஆட்சியில் நீடித்திருப்பேன். ஆனால், வங்கதேசத்தின் நலனுக்கு மட்டுமே முன்னுரிமை அளித்தேன். தற்போது அமெரிக்காவின் சதியால் ஆட்சியை இழந்துள்ளேன்.

நான் பேசியதை திரித்து கூறி மாணவர் போராட்டத்தை சிலர் தூண்டினர்.

போராட்டங்களில் ஈடுபட்ட மாணவர்கள் பரிதாபமாக உயிரிழப்பதை நான் விரும்பவில்லை. எனவே, மாணவர்களின் நலன் கருதி, பதவியை இராஜினாமா செய்தேன்.

பங்களாதேஷ் மக்களுக்கு ஒரு வேண்டுகோள். சமூக விரோதிகளை நம்பி ஏமாறாதீர்கள். அவர்களை எதிர்த்து நில்லுங்கள். அவாமிலீக் கட்சியினர், பொதுமக்கள் தாக்கப்படுவதாக வரும் செய்திகள் கவலை அளிக்கின்றன.

நாட்டின் விடுதலைக்காக என் தந்தையும் குடும்பத்தினரும் இன்னுயிரை தியாகம் செய்தனர். பங்களாதேஷ் மற்றும் நாட்டு மக்களுக்காக தொடர்ந்து பிரார்த்தனை செய்வேன். இறைவன் அருளால் மீண்டும் நாடு திரும்பி வருவேன்என அவர் தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குழப்பத்தை ஏற்படுத்த சதித்திட்டம்?

## ட்ரம்ப் சாடல்

**(வோஷிங்டன்)**

**அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தலையிட்டு குழப்பத்தை ஏற்படுத்த ஈரான் உள்ளிட்ட சில வெளிநாடுகள் முயற்சிப்பதாக குடியரசுக் கட்சி வேட்பாளரும், முன்னாள் ஜனாதிபதியுமான டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார்.**



மேலும் தேர்தல் பிரசாரம் தொடர்பான தனது மின்னஞ்சல் தொடர்புகளை இரகசியமாக ஊடுருவித் திருட ஈரானில் இருந்து இணையவழியில் முயற்சிகள் நடந்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தலையிட்டு குழப்பத்தை ஏற்படுத்த ஈரான் உள்ளிட்ட சில வெளிநாடுகள் முயற்சிப்பதாக அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சார்பில் அவரது பிரசார குழுவினர் அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளனர்.

இந்நிலையிலேயே அண்மையில் மைக்ரோ சொப்ட் நிறுவனத்தில் பிரச்சினை ஏற்பட்டு சர்வதேச அளவில் பல இணையவழி சேவைகள் முடங்கிய போது, தேர்தல் பிரசாரம் தொடர்பான தனது மின்னஞ்சல் விபரங்களைத் திருட முயற்சி நடந்துள்ளது.

இது தவிர ஈரான் இராணுவத்தின் உளவுப்பிரிவு கடந்த ஜூன் மாதம் தனது பிரசார குழுவிலுள்ள உயரதிகாரிகளுக்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பியுள்ளதுடன், அந்த மின்னஞ்சலைத் திறந்தால், அந்த கணனியில் உள்ள தகவல்களைத் திருடும் நோக்கில் வடிவமைக்கப்பட்டிருந்ததாகவும் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# தென்னாபிரிக்கா அழகி பட்டம் மாற்றுவலுவுடைய பெண் சாதனை



(கேப்டவுண்)

மியா லீ ரூக்ஸ் என்ற மாற்றுவலுவுடைய பெண் ஒருவர் தென்னாபிரிக்கா அழகி பட்டம் வென்றார்.

இந்தப் பட்டத்தைப் பெற்ற முதல் காது கேட்காத பெண் என்ற சாதனைப் புத்தகத்தில் மியா இணைந்தார்.

தற்போது 28 வயதாகும் மியா, சுமார் ஒரு வயதாக இருந்த போது, காது கேட்காமையால் பாதிக்கப்பட்டுள்ளார்.

ஒலிகளை எளிதில் அடையாளம் காணும் வகையில் காது கேட்கும் கருவி பொருத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

பேசும் திறனை வளர்த்துக் கொள்ள இரண்டு வருடங்கள் போராட வேண்டியிருந்தது என்றார்.மேலும் தற்போது மாடலாகவும் வணிக மேலாளராகவும் பணிபுரியும் மியா, "எல்லைகளை உடைப்பதற்காக நான் இந்த பூமியில் வைக்கப்பட்டேன் என்று இப்போது எனக்குத் தெரியும்" என நெகிழ்ச்சியாக பேசியுள்ளார். (நி-6)

# பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள பாகிஸ்தான்

## ஆய்வில் தகவல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் 10 சதவீதத்தினர், வருவாயை ஈடு கட்டும் வகையில் பகுதிநேர வேலை களில் ஈடுபட்டு வருவதாக ஆய்வு அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

பாகிஸ்தான் மக்கள் தொகை ஏறக்குறைய 24 கோடியாக உள்ளதுடன், அவர்களில் பலர் செலவுக்கு வழியின்றி தவித்து வரும் சூழல் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

56 சதவீத மக்கள் அத்தியா வசிய தேவைகளுக்கு செல விட்ட பின்னர் சேமிப்பதற்கு முடியாத சூழலில் உள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வரும் அந்த நாட்டில், கடந்த ஆண்டில் நிதி நெருக்கடியில் சிக்கித் தவித்து வருபவர்களின் எண்ணிக்கை 14 சதவீத நகர வாசிகள் என்ற அளவில் அதிகரித்து உள்ளது.



இதன் விளைவால், நாட்டின் நகர மக்கள் தொகையில் 74 சதவீதம் பேர், அவர்கள் பெறும் வருவாயை வைத்து கொண்டு மாத செலவுகளை கூட எதிர்கொள்ள முடிய வில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மே மாதத்தில் 60 சதவீதம் என்ற அளவில் இந்த எண்ணிக்கை இருந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது நடப்பு ஆண்டில் 74 சதவீதம் அதிகரிப்பு எனவும் இதனால், மளிகைப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய செலவுகளைக் கூட அவர்கள் நிறுத்தியுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 40 சதவீதத் தினர் நெருங்கியவர்களிடம் இருந்து கடன் வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதுடன் 10 சதவீதத்தினர் வருவாயை ஈடு கட்டும் வகையில் பகுதிநேர வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலின் பின்னர் புதிய கூட்டணி

### அமைச்சர் காஞ்சன

(கொழும்பு)

ஜனாதிபதியை வெற்றி பெறச் செய்வதற்காக வரலாற்றில் முதன் முறையாக பிரதான கட்சிகள் ஒரே மேடையில் இணைந்துள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேயசேகர தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் வரலாற்றில் முதன் முறையாக பிரதான கட்சிகள் சில ஒரே மேடையில் ஜனாதிபதி சார்பாக முன்னிலையாகியுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

கடந்த தேர்தல்களில் நாம் வெவ்வேறாக இணைந்து செயற்பட்டோம். ஆனால் இம் முறை நாம் ஒன்றாக இணைந்துள்ளோம். எதிர்வரும் தேர்தலில் நடப்பு அரசாங்கத்தின் ஜனாதிபதி சுயாதீன வேட்பாளராக களமிறங்கியுள்ளார்.

தமது அரசியல் கட்சி எதுவாக இருந்தாலும் தேர்தலில் ஜனாதிபதியை வெற்றி பெற செய்வதற்கு ஆதரவு வழங்க முடியும்.

எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கும் தரப்பினருடன் நாம் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் புதிய கூட்டணியை உருவாக்குவோம். பொதுஜன பெரமுனவை உருவாக்குவதற்கு கட்சியில் அங்கம் வகித்த உறுப்பினர்களே ஒத்துழைப்பு வழங்கினர். பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட வேண்டும் என்றே எண்ணுகின்றனர்.

பொதுஜன பெரமுனவுடன் எமக்கு எந்த வித முரண்பாடும் இல்லை. ஆனால் தேர்தலில் பொது ஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங்காதிருக்கவே தீர்மானித்தோம். ஏனெனில் நெருக்கடியில் இருந்த நாட்டை மீட்டெடுத்து இன்று இந்த நாட்டில் மக்கள் ஓரளவேனும் நிம்மதியாக வாழக்கூடிய சூழ் நிலையை ஏற்படுத்தியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 180 | 150-200 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 150 | 350 | 250-300 | 400 |
| தக்காளி | 300 | 300 | 300 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 180 | 120-140 | 200 |
| கோவா | 350 | 300 | 300 | 300 | 400 |
| கரட் | 300 | 350 | 350 | 300 | 320 |
| பூசணி | 180 | 180 | 150 | 150 | 120 |
| புடோல் | 100 | 150 | 140 | 140 | 240 |
| வாழைக்காய் | 350 | 200 | 250 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 250 | 350 | 300 | 250-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 150 | 250 | 250 | 230 | 240 |
| பாகற்காய் | 400 | 300 | 300 | 300 | 400 |
| வெண்டக்காய் | 160 | 100 | 180 | 160-200 | 400 |
| கருணைக் கிழங்கு | 140 | 180 | 160 | 150 | 240 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 | 200-250 | 200 |
| லீக்ஸ் | 300 | 450 | 360 | 350 | 350 |
| பீற்றூட் | 200 | 300 | 300 | 250 | 240 |
| கறிமிளகாய் | 800 | 800 | 700 | 400 | 1000 |
| முருங்கைக்காய் | 200 | 120 | 150 | 50-80 | 160 |
| போஞ்சி | 600 | 650 | 600 | 350 | 700 |
| கத்தரி தம்புள்ள | 100 | 150 | 200 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 50 | 50 | 80 |
| தேசிக்காய் | 500 | 600 | 500 | 400-500 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 130 | 70-90 | 60-100 | 80-130 |
| இராசவள்ளி | -- | 900 | 1000 | 650 | 700 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 250 | -- | 350 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 90 | 100 | 80 | 70 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 60 | 50 | 80 | 60 |

## இன்று ஒரு தகவல் 209



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஏற்பது இகழ்ச்சி

ஒரு நாள் நபிகள் நாயகத்திடம் ஓர் இளைஞன் வந்து நின்றான். உடம்பு நல்லா இருந்தது. இருந்தாலும் அந்த இளைஞன் இவரிடம் பிச்சை கேட்டான்.

உன் வீட்டிலே எதுவும் இல்லையா என்று கேட்டார் இவர்.

ஒரு ஒட்டகத்தோல் இருக்கிறது. அதை விரித்து அதிலேதான் படுக்கிறோம். ஒரே ஒரு பாத்திரம் இருக்கிறது தண்ணீர் குடிப்பதற்கு. அதைத்தான் உபயோகப்படுத்துகின்றோம். இந்த இரண்டும்தான் எங்களுக்கு இருக்கின்ற ஆஸ்தி என்றான் அந்தப் பையன்.

நபிகள் நாயகம் பாரத்தார். நீ உடனே வீட்டுக்கு போய் அந்த இரண்டு பொருளையும் இங்கே எடுத்துக் கொண்டு வா என்றார். இவன் உடனே போனான். கொஞ்ச நேரத்திலே அந்த இரண்டையும் எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தான்.

நபிகள் நாயகம் அங்கே இருந்த அவருடைய தோழர்களைப் பார்த்து நீங்கள் யாராவது இதை விலை கொடுத்து வாங்குகின்றீர்களா என்றார்.

உடனே ஒருவர் நான் இதனை ஒரு காசு கொடுத்து அதை வாங்குகின்றேன் என்றார்.

வேறு யாராவது அதிக விலை கொடுக்க முடியுமா என்று ஒரு கேள்வி கேட்டார்.

நான் இரண்டு காசு கொடுக்கிறேன் என்றார் இன்னொருவர். உடனே அவரிடம் அந்த பொருளை விற்றார்.

அவர் கொடுத்த காசை இந்தப் பையனிடம் கொடுத்தார். தம்பி இரண்டு காசு இருக்கு இப்போது கையிலே இதுலே ஒரு காசு எடுத்துக் கொண்டு போய் ஏதாவது தானியம் வாங்கிக்கொள் . இதை சமைத்து நீயும் உன் வீட்டிலே இருப்பவர்களும் சாப்பிடுங்கள்.

இன்னொரு காசு இருக்கின்றதே அதற்கு ஒரு கோடாரி வாங்கிக் கொண்டு என்னிடம் வா என்றார்.

உடனே அவன் போனான். அதே மாதிரி செய்தான். ஒரு கோடாரி வாங்கிக் கொண்டு இவரிடம் வந்து சேர்ந்தார். இவர் அந்த கோடாரிக்கு காம்பு ஒன்று தயார் செய்து கொடுத்தார்.

தம்பி நீ இதை எடுத்துக் கொண்டு காட்டிற்குப் போ. காய்ந்த மரக்கிளைகளை வெட்டிக் கொண்டு வா. அதை எல்லாம் கடைத் தெருவுக்குக் கொண்டு போய் விற்பனை செய். பதினைந்து நாள் கழித்து என்னிடம் வா. உனக்கு எவ்வளவு இலாபம் கிடைத்து என்று எனக்கு சொல் என்றார்.

இவன் சரி என்று சொல்லிவிட்டுப் போனான். பதினைந்து நாள் கழித்து வந்தான். முதல் தடவை அவன் இவரிடம் வந்ததற்கும் இப்போது வருவதற்கும் நிறைய வித்தியாசம் இருந்தது. இப்போது வந்த போது அவன் முகத்திலே ஒரு தெளிவு இருந்தது. மலர்ச்சி இருந்தது.

ஐயா இந்த பதினைந்து நாளிலே நான் பத்து காசு சம்பாதித்தேன். அதிலே உடுத்துவதற்கு ஆடையும் வாங்கினேன். இப்போது நான் மிகவும் சந்தோஷமாக இருக்கின்றேன். அடுத்தவர்களை நம்பிப் பிழைக்க வேண்டிய அவசியமே இனிமேல் எனக்கு இல்லை என்றார்.

இதைக் கேட்டு விட்டு நபிகள்நாயகம். நீ சொல்வதை கேட்கின்ற போது எனக்கு சந்தோஷமாக இருக்கின்றது. எப்போதும் முயற்சிக்கு தகுந்த பலனை ஆண்டவன் கொடுக்கின்றார் என்பதை மறந்துவிடாதே. பிச்சை எடுக்கின்றவர்களை ஆண்டவன் விரும்புவதில்லை. என்று அந்த இளைஞனுக்கு உபதேசம் செய்தார்.

இது இவனுக்கு மட்டும் செய்த உபதேசம் இல்லை. உடம்பு நன்றாக இருந்தும் பிச்சை எடுக்க வேண்டும் என்று நினைக்கின்ற எல்லோருக்கும் செய்த உபதேசம்.

**"கையேந்தும் செய்கையினும்**
**காடு சென்று விறகு வெட்டி**
**மெய்யேந்தும் வாழ்வதனை**
**மெச்சுகின்ற நாயகமே!"**

என்று இதைப் பற்றி பாடியிருக்கின்றார்கள்.

பொதுவாக இது மாதிரி பெரியவர்கள் செய்திருக்கின்ற உபதேசங்களைக் கேட்டு அதன்படி நடந்து கொள்வது எல்லோருக்குமே நல்லது.

பல பேர் உபதேசங்களை கேட்கின்றார்கள். ஆனால் அதன்படி நடந்து கொள்வதில்லை. அதனாலே தான் வீணாப் போய்விடுகின்றார்கள்.

ஒரு நல்ல வித்துவான் அருமையாக ஆர்மோனியம் வாசிப்பார். குடிப்பழக்கம் அவரை கெடுத்து விட்டது. பிச்சை எடுக்கின்ற அளவிற்கு வந்து விட்டார்.

ஒரு பெரியவர் இதைப் பார்த்தார். இதோ பாருங்கள் உங்களிடம் நல்ல சங்கீத ஞானம் இருக்கின்றது. திறமை இருக்கின்றது இப்படி இருக்கின்ற போது அநாவசியமாக எதற்கு இப்படி பிச்சை எடுக்க வேண்டும்? இப்போது நான் ஒரு அருமையான ஆர்மோனியம் வாங்கி அதை உங்களுக்கு பரிசாகக் கொடுக்கின்றேன். இதை உபயோகப்படுத்தி இனிமேல் நீங்கள் சுயமாக சம்பாதித்து சாப்பிட வேண்டும் என்றார்.

இவரும் மிகவும் நம்பிக்கையோடு சரி என்றார். அவரும் ஒரு நல்ல ஆர்மோனியப் பெட்டியை வாங்கிக் கொடுத்தார்.

ஒரு மூன்று மாதம் கழித்து மறுபடியும் என்னை வந்து பாருங்கள். எப்படி இருக்கிறது நிலைமை என்று சொல்லுங்கள் என்றார்.

வித்துவான் மிகவும் பவ்யமாக அதை வாங்கிக்கொண்டு போனார்.

அவர் சொன்ன மாதிரியே மூன்று மாதம் கழித்து திரும்பி வந்தார். ஆனால் வெறுங் கையுடன் வந்தார்.

இன்னொரு ஆர்மோனியப் பெட்டி வாங்கிக் கொடுத்தால் நல்லது என்றார்.

ஏற்கனவே வாங்கிக் கொடுத்தது எங்கே என்று கேட்டார் இவர்.

இது அடகுக் கடையிலே இருக்கிறது என்றார்.

இவரை எல்லாம் எப்படி திருத்துவது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லொறி-மு.சக்கரவண்டி விபத்து குழந்தை உட்பட மூவர் பலி

## திருமண வீட்டிற்கு சென்று திரும்புகையில் சோகம்

(கண்டி)

கொழும்பு-கண்டி வீதியில் வேவல்தெனிய பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் 8 மாத குழந்தை உள்ளிட்ட மூவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் கெலிஓயா பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் திருமண நிகழ்வொன்றில் கலந்து கொண்டுவிட்டு வீடு திரும்புகையிலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

நிட்டம்புவவலிருந்து கண்டி நோக்கி பயணித்த முச்சக்கர வண்டியொன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் காயமடைந்த மூவரில் இருவர் வைதியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு ஒருவர் வறக்காப்பொல வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தங்கோவிட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-6)

# அரச அச்சகத்தில் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அச்சுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக் குழுவினால் வழிநடத்தப்பட்ட ஆரம்பகட்ட அச்சிடும் பணிகள் ஏற்கனவே இடம்பெற்று வருவதாகவும் ஓகஸ்ட் 15ஆம் திகதிக்குப் பின்னர் வாக்குச் சீட்டுகள் அனுப்பி வைக்கப்பட்ட பின்னர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அரசாங்க அச்சக அதிகாரி லியனகே தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஓகஸ்ட் 15 ஆம் திகதி காலை 9 மணி முதல் 11 மணி வரை தேர்தல்கள் செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

### இரணைமாதாநகர்-நாச்சிக்குடா

# வழித்தடத்தில் பேருந்து சேவை நடத்துமாறு மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி மேற்கில் புதிய வழித்தடத்தில் பேருந்து சேவைகள் நடத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மேற்கிற்கான பேருந்து சேவைகள் கிளிநொச்சியில் இருந்து அக்கராயன், வன்னேரிக்குளம், பல்லவராயன்கட்டு, முழங்காவில் வரை நடைபெறுகின்றன.

இந்நிலையில் முழங்காவில் உப நகரத்தில் தரித்து நிற்கின்றன. இப்பேருந்துகள் விஜி வீதி வழியாக இரணைமாதாநகர், நாச்சிக்குடா பாடசாலை, நாச்சிக்குடா சந்தி ஆகிய பகுதிகளில் புனரமைக்கப்பட்டுள்ள வீதி வழியாக பேருந்துகள் பயணிக்குமானால் 1,000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் மருத்துவமனைக்கு செல்லும் நோயாளர்கள் நனமையடைவார்கள்.

குறித்த வீதி வழியாக புதிய வழித்தடத்தில் பேருந்து சேவையை வழங்குவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-350)

# வீதியின் நடுவே தொடரூந்தை நிறுத்தி உணவு வாங்கிய சாரதி

## வைரலாகும் காணொளி



(புத்தளம்)

புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் நடுவில் தொடருந்தை நிறுத்தி அருகாமையில் உள்ள கடையொன்றில் இருந்து உணவு பெற்றுக் கொள்ளும் காணொளி ஒன்று தற்போது சமூக வலைத் தளங்களில் பரவி வருகின்றது.

குறித்த வாய்க்கால் தொடருந்து நிலையம் சிறியதாக இருப்பதாலும், பயணிகள் தொடருந்து நீளம் நீண்டதாலும், அதன் இயந்திரப் பகுதி புத்தளம்-கொழும்பு பிரதான வீதயின் நடுவில் நிறுத்தப்பட்டுள்ளது.

இதன் போது, தொடருந்தில் இருந்து இறங்கிய சாரதி, அருகில் உள்ள கடையில் உணவுப் பொதியை வாங்கி, தொடரூந்து இயந்திர பகுதிக்குள் மீண்டும் நுழைய, தொடரூந்து மீண்டும் பயணிக்க தொடங்கியது.

இந்நிலையாங்கில் குறித்த காணொளி பதிவு சமூக வலைத் தளங்களில் ரைலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ‘யானைகளை பாதுகாப்போம்’ மாணவர்கள் விழிப்புணர்வு




(குருமபுரம்)

சர்வதேச யானைகள் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயத்தில் “யானைகளை பாதுகாப்போம்” என்ற தொனிப் பொருளில் விழிப்புணர்வு நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

பாடசாலையின் முதல்வர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.சிவசங்கர் கலந்து சிறப்பித்தார்.

இதன்போது பாடசாலையின் அனைத்து வகுப்பு மாணவர்களும் யானைபோல் வேடம் அணிந்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.



மேலும் உலக யானை தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் யாழ்.வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர் எம்.சசிகரன், சுற்றுச்சூழல் அதிகார சபையின் உத்தியோகத்தர் எஸ்.லதீஸ்குமார், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், பாடசாலையின் சுற்றுச்சூழல் கழகத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் என பலரும் கலந்து கொண்டனர். (நி-6-316)



கிளிநொச்சி வடக்கு வலய முருகானாந்தா கல்லூரியின் உள்ளக விளையாட்டு பயிலகத்தினை கடந்த 9 ஆம் திகதி கல்லூரி அதிபர் அ.பங்கையற்செல்வன் ஆரம்பித்து வைத்தார். (படம்: கிருஷ்ணகுமார்)

# தொழில் முனைவோருக்கான பயிற்சி நெறிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் இளம் சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான முயற்சியாண்மை அபிவிருத்தி வதிவிடப்பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு வடமாகாண முகாமைத்துவ பயிற்சி நிலையத்தில் நேற்றுக் காலை 9 மணிக்கு மாவட்ட சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் பதில் உதவிப் பணிப்பாளர் ச.சசீபன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன்கலந்து கொண்டு முயற்சியாண்மை அபிவிருத்தி வதிவிடப்பயிற்சி நெறியினை ஆரம்பித்து வைத்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 556





தூக்கி வாரிப் போட்டது. அவன் மனத்தில் ஒரு சந்தேகம் உதித்தது. எழுந்து ஓடிப் போய் வாசற் பக்கம் பார்த்தான். குதிரையை நிறுத்திய இடத்தில் அதைக் காணோம்!

"ஐயோ! குதிரை எங்கே?" என்று இரைச்சல் போட்டுக் கொண்டே உடைவாளின் பிடியில் கை வைத்தான். "பயப்படாதே! உன் குதிரை பத்திரமாயிருக்கிறது. கொல்லைப்புறத்தில் போய்ப் பார்!"

வந்தியத்தேவன் கொல்லைப்புறம் சென்று பார்த்தான். அங்கே மூன்று பக்கம் அடைக்கப்பட்ட கீத்துக் கொட்டகையில் அவனுடைய குதிரை நின்று கொண்டிருந்தது. கொல்லன் உலைக்களம் ஊதிய சிறுபிள்ளை அதன் வாயில் புல் கொடுத்துக் கொண்டிருந்தான். வந்தியத்தேவனைப் பார்த்ததும் குதிரை உடலைச் சிலிர்த்துக் கொண்டு கனைத்தது.

"ஐயா! இங்கே வந்து கொஞ்சம் உங்கள் குதிரையைப் பார்த்துக் கொள்ளுங்கள். இதன் குளம்புகளுக்கு அளவு எடுக்க வேண்டும்!" என்றான் பையன். வந்தியத்தேவன் குதிரை அருகில் சென்று அதைத் தடவிக் கொடுத்துக் கொண்டு நின்றான். பையன் குதிரையின் குளம்புக்கு அளவு எடுத்தான்.

"இதை யார் இங்கே கொண்டு வந்து கட்டினார்கள்?" என்று வந்தியத்தேவன் கேட்டான். "நான்தான் கட்டினேன்." "எதற்காக?" "அப்பா கட்டச் சொன்னார்." அது எதற்காக?

இந்த ஊர் வழியாகச் சற்று முன்னால் பெரிய பழுவேட்டரையரும், அவர் பரிவாரங்களும் போனார்கள். குதிரையை வாசலில் பார்த்திருந்தால் கட்டாயம் கொண்டு போயிருப்பார்கள்.

வந்தியத்தேவனுக்குப் பழைய ஞாபகம் திருநாராயணபுரத்து ஞாபகம் வந்தது. தான் செய்த தவறை எண்ணி வெட்கம் அடைந்தான். கொல்லனிடமும், அவன் மகனிடமும் மனத்திற்குள் நன்றி உணர்ச்சி கொண்டான். குதிரையின் குளம்புக்கு அளவு எடுத்துக் கொண்டதும் இருவரும் உலைக்களத்துக்குள் வந்தார்கள்.

கொல்லன் இரும்புத்துண்டை எடுத்துக் குளம்பைப் போல் வளைத்து வேலை செய்யத் தொடங்கினான். என் குதிரையைக் காப்பாற்றிக் கொடுத்தீரே? அதற்காக மிக்க வந்தனம்" என்றான் வல்லவரையன்.

"என்னைத் தேடி வருகிறவர்களுடைய உடைமையை நான் காப்பாற்றிக் கொடுக்க வேண்டுமல்லவா? அது என் கடமை." பழுவேட்டரையர் பரிவாரம் இந்தப் பக்கம் போய் எத்தனை நேரம் இருக்கும்?

"இரண்டு நாழிகைக்கு மேலேயிருக்கும். அவ்வளவு ஆர்ப்பாட்டத்துக்கும் நீ தூங்கிக் கொண்டிருந்தாயே, அதை நினைத்தால் தான் எனக்கு வியப்பாக இருக்கிறது." நான்தான் தூங்கிப் போய் விட்டேன். இத்தனை நேரம் நீர் வீணாக்கி விட்டீரே? அவர்கள் போன பிற்பாடாவது வேலையை உடனே ஆரம்பித்திருக்கலாமே?

"எப்படி ஆரம்பிப்பது? அவர்கள் கொண்டு வந்த செய்தியைக் கேட்ட பிறகு, யாருக்கு வேலை செய்ய மனம் வரும்? உனக்காக மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு இதை நான் செய்கிறேன். எங்கிருந்து அப்பனே நீ வருகிறாய்? அவர்கள் கொண்டு வந்த செய்தி என்னவாயிருக்கும் என்று யோசித்துக் கொண்டே வந்தியத்தேவன், இலங்கையிலிருந்து வருகிறேன்" என்றான்.

(தொடரும்)

"அப்படி ரொம்ப நேரம் ஆகிவிடவில்லை, இரண்டு ஜாமந்தான். அப்பனே! நீ கும்பகர்ணன் வம்சத்தில் வந்தவனோ? பட்டப்பகலில் இப்படித் தூங்குகிறாயே? இரவிலே தூங்க மாட்டாயா?" என்றான் கொல்லன்.

"கடவுளே! இரண்டு ஜாம நேரமா தூங்கி விட்டேன்? குதிரைக் குளம்புக்குக் கவசம் செய்தாகி விட்டதா?" "இனிமேல்தான் செய்ய வேண்டும். ஆனால் உன்னைப் போன்ற தூங்கு மூஞ்சிக்கு அதனால் என்ன பயன்? நீ குதிரையையே பறிகொடுத்து விடுவாய்! இன்னும் உன்னையே கூடப் பறி கொடுத்து விடுவாய்!"

வந்தியத்தேவனுக்குத்

# சிறுவர் அரங்கம்

## மூடத்தனத்தால் ஏமாந்த வியாபாரி



கங்கைக் கரையில் சிறிய நகரம் ஒன்று இருந்தது. அங்கே காவி உடை அணிந்த ஒருவன் வசித்து வந்தான். அவன் யாரிடமும் எதுவும் பேசுவதில்லை. அதனால் அவனை மௌன சாமி என்று எல்லோரும் அழைத்தனர்.

தினமும் அந்த மௌன சாமி வீடுவீடாகச் சென்று, பிச்சை எடுத்து உண்பது வழக்கம்.

மௌனசாமி வழக்கம் போல ஒரு நாள் பிச்சை எடுக்கச் சென்றான். அப்பொழுது, ஒரு வீட்டில் வியாபாரியின் மகள் பிச்சை போட வந்தாள். அவள் மிக அழகானவள். திருமணம் ஆகாதவள்.

அவளைக் கண்டதும் மயங்கிய மௌன சாமி. மெய்மறந்து, "கடவுளே!" என்று பெருமூச்சு விட்டான்.

அந்த வார்த்தை காதில் விழுந்ததும், ஓடி வந்து பார்த்தான் வியாபாரி. மௌன சாமியோ அப்பொழுது கண்களை மூடிய படியே அழகியை நினைத்து, கற்பனையில் ஆனந்தமாக மிதந்து கொண்டிருந்தான்.

வியாபாரி உடனே மௌனசாமியின் காலில் விழுந்து வணங்கி, மௌனசாமியாகிய நீங்கள் வாய் திறந்து, "கடவுளே"! என்று சொன்னதில் ஏதோ ஒரு ரகசியம் உள்ளது.

கருணை கூர்ந்து, தாங்கள் அதை விளக்கிக் கூறவேண்டும் என்று பணிவோடு வேண்டினான்.

வியாபாரியின் மூடத்தனத்தை அறிந்த மௌன சாமி, சூழ்ச்சி செய்ய தீர்மானித்தான். வியாபாரியே! உன்னுடைய சொத்து சுகம் யாவும் அழிந்து, உனக்கு மரணம் நேரப் போவதை ஞானப்பார்வையினால் உணர்ந்தேன், அதனால், என்னை மறந்த நிலையில் மௌனம் கலைந்து, "கடவுளே" என்று கூறிவிட்டேன்" என்றான் மௌனசாமி.

"சொத்து, சுகம் அழிவு, மரணம்" என்ற சொற்களைக் கேட்டதுமே வியாபாரி நிலை குலைந்து, தள்ளாடிய நிலையில், "சுவாமி இதற்கு ஒரு பரிகாரம் கூறி, என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று மன்றாடினான்.

மௌனசாமி கண்களை மூடி, சிறிது நேரம் யோசித்து, வியாபாரி, தான் விரித்த வஞ்சகவலையில், சரியாக விழுந்து விட்டான் என்பதை அறிந்து, உள்ளம் பூரித்தான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு ஒரு விஷயத்தைப் புரிய வைக்கிறது, ஆனால் அனுபவமே அதை உணர வைக்கிறது.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கையில் பட்டுப்போன பழம்பெரும் கட்சிகள்

2024ஆம் ஆண்டில் நடைபெறுகின்ற ஜனாதிபதித் தேர்தலை உன்னிப்பாகக் கவனித்தால், ஓர் உண்மை புலப்படும்.

அதாவது, இந்த நாட்டின் பழம்பெரும் கட்சிகள் எவையும் தேர்தலில் போட்டியிடவில்லை. சுருங்கக்கூறின் அந்தப் பழம்பெரும் கட்சிகள் பட்டுப்போயின எனலாம்.

ஆம், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பன இந்த நாட்டின் ஆதிகாலக் கட்சிகள். இருந்தும் அந்தக் கட்சிகளின் பெயரில் – அவற்றின் சின்னத்தில் ஜனாதிபதி வேட்பாளர்கள் எவரும் போட்டியிடவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

இதை இன்னும் விரிவுபடுத்திக் கூறுவதாயின், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்தில் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கவில்லை.

மாறாக, அவர் ஒரு சுயேட்சை வேட்பாளராகவே ஜனாதிபதித் தேர்தலைச் சந்திக்கவுள்ளார்.

இதுபோல ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைமை மிகவும் பரிதாபத்துக்குரியது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக இருப்பதற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

தவிர, நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் அந்தக் கட்சி சார்பில் எவரும் போட்டியிடவில்லை என்பது வேறு கதை.

ஆக, ஐக்கிய தேசியக் கட்சியின் பிதாமகர் டி.எஸ்.சேனாநாயக்க மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிதாமகர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க ஆகியோர் முன்னின்று ஆரம்பித்த பிரதான அரசியல் கட்சிகள் இன்று தன்னிலை இழந்து, பட்டமரங்களாகிப் போயுள்ளன.

அந்தக் கட்சிகளின் பெயரில் – அவற்றின் சின்னத்தில் போட்டியிடுவது தோல்விக்கு வழிவகுக்கும் என்று அந்தக் கட்சியினர் உணரும் அளவுக்கு இந்த நாட்டின் ஆரம்பகாலப் பிரதான கட்சிகள் படுபாதாளத்தில் வீழ்ந்துள்ளன.

இதற்கான காரணம் என்ன? என்று ஆராயும்போதுதான், மேற்குறித்த இரண்டு கட்சிகளுமே இந்த நாட்டில் மனித வதையை அரங்கேற்றியவை.

உண்மை. இலங்கைத் திருநாட்டில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த மேற்போந்த இரண்டு கட்சிகளும் பேரினவாதக் கருத்துக்களை சிங்கள மக்கள் மத்தியில் விதைத்தன. இனவாதத் தீயை மூட்டின.

இதன் காரணமாகக் காலத்துக்குக் காலம் சிங்கள இனவாதிகள் தமிழ் மக்களின் குருதியைக் குடித்து தங்களின் இனவாதப் பசியைத் தீர்த்தனர்.

நாட்டின் இரண்டு பிரதான கட்சிகள் அரங்கேற்றிய மனித வதைகளும் அதனூடு ஆற்றாது அழுத கண்ணீரும் சேர்ந்து ஆதிக்கட்சிகளின் மூலவேர்களைச் சுட்டெரித்துவிட, அவை இன்று பட்டமரமாகி உழுத்துப் போகின்றன.

இங்குதான் தர்மம் இல்லாத எவையும் அழியும் என்ற உண்மை உணர்த்தப்படுகிறது.

# ஒக்டோபர் முதல் ஓய்வூதியர்களுக்கு இடைக்கால கொடுப்பனவு வழங்கப்படும்

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

அரச சேவையில் அனைத்து ஓய்வூதியர்களுக்கும் தற்போது வழங்கப்படும் 2,500 ரூபா கொடுப்பனவுக்கு 3,000 ரூபாவும் சேர்த்து, எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் இருந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இதன்படி எதிர்வரும் செப்ரெம்பர் மாத நிலுவைத் தொகையான 3,000 ரூபாயுடன் ஒக்டோபர் மாதம் ஓய்வூதியம் 6,000 ரூபாவாக வழங்கப்படும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன்பிறகு, நவம்பர் மாதம் முதல் இதுவரை கிடைத்த ரூ.2,500 உதவித்தொகையுடன், புதிதாக வழங்கப்படும் இடைக்கால உதவித் தொகையான ரூ.3,000 ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்த மேலதிக கொடுப்பனவான 3,000 ரூபாவை வழங்குவதற்கு நிதி அமைச்சும் முழுமையான எழுத்துமூல அனுமதியை வழங்கியுள்ளதால், அரச நிர்வாக அமைச்சு இதற்கான சுற்றறிக்கையை வெளியிட வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், செப்ரெம்பர் மாதம் அந்த கொடுப்பனவை வழங்குவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, ஒக்டோபர் மாதம் இடைக்கால கொடுப்பனவாக 3,000 ரூபாயும், செப்ரெம்பர் மாத நிலுவைத் தொகையான 3,000 ரூபாயுடன் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஒக்டோபர் மாத ஓய்வூதியத்துடன் 6,000 ரூபா நிச்சயம் கிடைக்கும் என தெரிவித்தார். (ம-7)

## 240 சிகரெட்டுக்களுடன் தும்பளையில் பெண் கைது

வரி செலுத்தப்படாது நாட்டிற்கு கடத்திவரப்பட்ட சிகரெட்டுக்களை விற்பனை செய்த பெண் ஒருவர் விஷேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட தும்பளைப் பகுதியில் இவ்வாறான சிகரெட் விற்பனை செய்யப்படுவதாக விஷேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய நேற்று திங்கட்கிழமை (12) அவர் 240 சிகரெட்டுக்களுடன் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பெண் மேலதிக விசாரணைக்காகப் பருத்தித்துறை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-7,60)

## பெண்ணைத் தாக்கி நகைகள் கொள்ளை

(அம்பாறை)

முகமூடி அணிந்த நபர் ஒருவர் பெண்ணைத் தாக்கி விட்டு நகைகளை கொள்ளையடித்து சென்ற சம்பவம் ஒன்று சம்மாந்துறைப் பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீட்டில் அதிகாலை வேளை 3 மணியளவில் நித்திரையில் இருந்த பெண்ணைத் தாக்கி விட்டு முகமூடி அணிந்த நபர் ஒருவர் நகைகளை கொள்ளையடித்துச் சென்றதாக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை (11) முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டிற்கமைய சம்மாந்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதன் போது, கல்முனை பிரதேச நகைக் கடை ஒன்றில் நேற்று திங்கட்கிழமை (12) திருடப்பட்ட நகை மீட்கப்பட்டுள்ளதுடன் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட சந்தேக நபரும் சம்மாந்துறை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 37 வயதுடைய சந்தேக நபரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## காலியில் விபரீத முடிவெடுத்த இளம் தம்பதிகள் மரணம்

(கொழும்பு)

காலி, அம்பலாங்கொடை, படபொல பிரதேசத்தில் இளம் தம்பதிகள் விபரீத முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் 28 வயதுடைய பெண்ணும் 29 வயதுடைய நபரொருவருமே உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த தம்பதியின் குழந்தையின் அழுகுரலைக் கேட்ட அயல் வீட்டார்கள் குறித்த வீட்டிற்குள் சென்று பார்த்த போது தம்பதியர் உயிரிழந்திருப்பதைக் கண்டுள்ளனர்.

இதனையடுத்து, அயல் வீட்டார்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கிய நிலையில் அங்கு சென்ற பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில் தம்பதிகளின் உயிரிழப்புக்கான காரணம் இன்னும் வெளியாகாத நிலையில் குழந்தையை தவிக்க விட்டு இளம் தம்பதிகள் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ம-7)

### ஆசிரியையின் புகைப்படத்தை வெளியிட்ட

## இரண்டு மாணவர்கள் மாத்தளையில் கைது

(மாத்தளை)

மாத்தளைப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு ஒரு வருடப் பயிற்சிக்காக சென்ற இளம் பெண் ஆசிரியை ஒருவரின் புகைப்படத்தை நிர்வாணப் புகைப்படமாக எடிட் செய்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்ட இரு மாணவர்களைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த இளம் ஆசிரியை பாடசாலைக்கு புதிய ஆசிரியையாக பயிற்சியளிக்க நியமிக்கப்பட்டதுடன், அவரின் நிர்வாணப் புகைப்படம் சமூகவலைத்தளங்களில் பரவியதையடுத்து, மாத்தளைப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு, குறித்த பாடசாலையின் 10ஆம் தர மாணவர்கள் இருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். (ம-7)

## பேருந்து விபத்து இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

பண்டாரகம - கஸ்பேவ வீதியில் வல்மில்ல கல்கடே சந்திக்கு அருகில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருகையில், பேருந்து திடீரென சாலையின் வலது பக்கம் திரும்பியதும், சாரதி தடுப்பிற்கு பதிலாக ஆக்சிலேட்டரை மிதித்துள்ளார்.

இதன் போது பேருந்து வீதியின் வலது பக்கமாக விலகி கடை ஒன்றின் மீது மோதியதில் வீதியோரம் இருந்த இருவர் மீது மோதியுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர்கள் அக்குரஸ்ஸ பிரதேசத்தில் வசித்து வந்த 53 வயதுடைய சாந்த ரஞ்சித் மற்றும் எஸ். கே. சுமனசிறி என்ற 60 வயதுடையவர்கள் என ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனாதிபதித் தேர்தல் 2024 செப்டெம்பர் 21
# கடந்தகால ஜனாதிபதித் தேர்தல்கள் பற்றிய ஒரு மீள் பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

08

(1)மகிந்த ராஜபக்ஷ (ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி), (2) ரணில் விக்கிரமசிங்க (ஐக்கிய தேசிய கட்சி ), (3)சிரிதுங்க ஜய சூரிய (ஐக்கிய சோசலிசக் கட்சி), (4)அசோகா சுரவீர (ஜாதிக சங் கவர்தன பெரமுன), (5)விக்டர் எட்டிகொட (எக்சத் லங்கா பொது ஜன பக்சய), (6) சாமில் ஜயனெத்தி (புதிய இடது முன்னணி), (7) அருண டி சொய்சா (ருகுணு ஜனதா கட்சி), (8) விமல் கீகனகே (சிறீலங்கா தேசிய முன்னணி), (9) அனுரா டி சில்வா (ஐக்கிய லலித் முன்னணி), (10) அஜித் ஆராச்சிகே (ஜனநாயக ஐக்கியக் கூட்டமைப்பு), (11) விஜே டயஸ் (சோசலிஸ்ட் ஈக்குவாலிட்டி கட்சி), (12) நெல்சன் பெரேரா (இலங்கை முன்னேற்ற முன்னணி), (13) எச்.தர்மத்வாஜா (ஐக்கிய தேசிய மாற்று முன்னணி).முஸ்லிம் தேசிய கூட்டணி (Muslim National Alliance) கட்டுப் பணத்தை செலுத்தியிருந்தும் வேட்புமனுவை தாக்கல்செய்யவில்லை.

2005 தேர்தலின்போது ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்று தீர்மானித்து புலிகள் வடக்கில் தமிழ் வாக்குகள் விழாமல் செய்ததால்தான் மகிந்த 488 7152 (50.29) வாக்குகள் பெற்று வெறுமனே 180 786 (ஒரு லட்சத்து எண்பதாயிரம்) வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்று ஜனாதிபதியானார்.

எதிரணி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க 470 6366 (48.43) வாக்குகளைப் பெற்றிருந்தார்.

### 5வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -2005

வட மாகாணம்

| | யாழ் மாவட்டம் | | வன்னி மாவட்டம் | |
|---|---|---|---|---|
| வேட்பாளர் | வாக்குகள் | % | வாக்குகள் | % |
| விமல் கீகனகே | 15 | 0.19% | 68 | 0.08% |
| சாமில் ஜயனெத்தி | 24 | 0.31% | 133 | 0.16% |
| அஜித் ஆராச்சிகே | 31 | 0.39% | 107 | 0.13% |
| சிரிதுங்க ஜயசூரிய | 72 | 0.92% | 520 | 0.62% |
| நெல்சன் பெரேரா | 16 | 0.20% | 27 | 0.03% |
| விஜே டயஸ் | 29 | 0.37% | 69 | 0.08% |
| அனுரா டி சில்வா | 21 | 0.27% | 62 | 0.07% |
| அருண டி சொய்சா | 12 | 0.15% | 71 | 0.08% |
| மகிந்த ராஜபக்ச | 1967 | 25.00% | 17197 | 20.36% |
| ரணில் விக்கிரமசிங்க | 5523 | 70.20% | 65798 | 77.89% |
| அசோகா சுரவீர | 34 | 0.43% | 286 | 0.34% |
| விக்டர் எட்டிகொட | 120 | 1.53% | 115 | 0.14% |
| எச்.தர்மத்வாஜா | 4 | 0.05% | 23 | 0.03% |
| செல்லுப்படியான வாக்குகள் | 7868 | | 84476 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 656 | | 1398 | |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | 8524 | 1.21% | 85874 | 34.30% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 701938 | | 250386 | |

### 5வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -2005

கிழக்கு மாகாணம்

| | மட்டக்களப்பு மாவட்டம் | | திகாமடுல்லை மாவட்டம் | | திருகோணமலை மாவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| வேட்பாளர் | வாக்குகள் | % | வாக்குகள் | % | வாக்குகள் | % |
| விமல் கீகனகே | 43 | 0.03% | 134 | 0.05% | 71 | 0.05% |
| சாமில் ஜயனெத்தி | 149 | 0.10% | 188 | 0.07% | 157 | 0.10% |
| அஜித் ஆராச்சிகே | 153 | 0.10% | 215 | 0.08% | 165 | 0.11% |
| சிரிதுங்க ஜயசூரிய | 892 | 0.58% | 1091 | 0.38% | 792 | 0.53% |
| நெல்சன் பெரேரா | 59 | 0.04% | 89 | 0.03% | 56 | 0.04% |
| விஜே டயஸ் | 104 | 0.07% | 82 | 0.03% | 67 | 0.04% |
| அனுரா டி சில்வா | 142 | 0.09% | 203 | 0.07% | 132 | 0.09% |
| அருண டி சொய்சா | 124 | 0.08% | 297 | 0.10% | 157 | 0.10% |
| மகிந்த ராஜபக்ச | 28836 | 18.87% | 122329 | 42.88% | 55680 | 37.04% |
| ரணில் விக்கிரமசிங்க | 121514 | 79.51% | 159198 | 55.81% | 92197 | 61.33% |
| அசோகா சுரவீர | 578 | 0.38% | 1072 | 0.38% | 558 | 0.37% |
| விக்டர் எட்டிகொட | 225 | 0.15% | 331 | 0.12% | 276 | 0.18% |
| எச்.தர்மத்வாஜா | 18 | 0.01% | 38 | 0.01% | 26 | 0.02% |
| செல்லுப்படியான வாக்குகள் | 152837 | | 285267 | | 150334 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1778 | | 2941 | | 2094 | |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | 154615 | 48.51% | 288208 | 72.70% | 152428 | 63.84% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 318728 | | 396453 | | 238756 | |

## ஆறாவது ஜனாதிபதித் தேர்தல் -2010

ஆறாவது ஜனாதிபதித் தேர்தல் 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி நடைபெற்றது. முன்னெப்போதுமில்லாதவாறு இந்தத் தடவை 22 வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் வாக்குகளை ஒரு பிரிவினருக்கு கிடைக்க விடாமல் தடுப்பதற்காகவே போட்டியிட்டதாகவும் அதற்கு இவர்கள் பெரும் தொகை பணத்தை பெற்றுள்ளதாகவும் மக்கள் மத்தியில் பேச்சு உள்ளது. இவர்களது பெயரும் கட்சியும் பின்வருமாறு.

சரத் பொன்சேகா (புதிய ஜனநாயக முன்னணி), மகிந்த ராஜபக்ஷ (ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி), சன்ன ஜானக சுகத்சிறி கமகே (ஐக்கிய ஜனநாயக முன்னணி), முகமது காசிம் முகமது இஸ்மைல் (ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி), விக்கிரபாகு கருணாரத்தின (இடதுசாரி முன்னணி), ஏ.எஸ்.பி.லியனகே (சிறீலங்கா தொழிற் கட்சி), சரத் மனமேந்திரா (நவ சிகல உருமய), எம். கே. சிவாஜிலிங்கம் (சுயேட்சை), லால் பெரேரா (எமது தேசிய முன்னணி), அச்சல அசோக சுரவீர (ஜாதிக சங்கவர்தன பெரமுன), மகிமன் ரஞ்சித் (சுயேட்சை), சிரிதுங்க ஜெயசூரிய (ஐக்கிய சோசலிசக் கட்சி), விஜேதாஸ் (சோசலிச சமத்துவக் கட்சி), இதுரூஸ் முகமது இலியாஸ் (சுயேட்சை), உக்கு பண்டா விஜேக்கூன் (சுயேட்சை), முத்து பண்டார தெமினிமுல்ல (ஒக்கொம வெசியோ), சனத் பின்னாதுவ (தேசியக் கூட்டமைப்பு), உபாலி சரத் கொங்கஹகே (ஐக்கிய தேசிய மாற்று முன்னணி), முகமது முஸ்தபா (சுயேட்சை), பத்தர முல்ல சீலாரதன தேரோ (ஜன சேதா பெரமுன), சேனரத்ன டி சில்வா (Patriotic National Front), அருணா டி சொய்சா (ருகுணு ஜனதா கட்சி).மீண்டும் ஒருதடவை புலிகளே மகிந்த ராஜபக்ஷவின் அதிஷ்டமாக அமைந்தனர். இத்தடவை வெல்லப்படமுடியாதவர்கள் எனக் கருதப்பட்ட புலிகள் யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இலங்கை வரலாற்றில் இவருக்கு முன்னர் இருந்த அனைத்து தலைவர்களுக்கும் கிடைக்காத அளவு மரியாதையும் அபிமானமும் இவருக்கு சிங்கள மக்கள் மத்தியில் அதிகரித்தது.

அந்த வெற்றிக்களிப்பில் இலங்கை வரலாறு காணாத அளவுக்கு வன்னியில் தமிழ் மக்கள் பட்ட துயரமும் கண்ணீரும் கூட மறைக்கப்பட்டு விட்டது. ஒவ்வொரு மாகாண சபையிலும் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியை நிலை நிறுத்திக் கொண்டு அடிமட்டத்தில் வலுவான அத்திவாரத்தை போட்டுக்கொண்டு சுமார் இரண்டு வருடங்கள் முன்னதாகவே ஜனாதிபதித் தேர்தலை நடத்தினார். (தொடரும்...)

### 6வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -2010

| வேட்பாளர் | கட்சி | வாக்குகள் | % |
|---|---|---|---|
| சரத் பொன்சேகா | புதிய ஜனநாயக முன்னணி | 4,173,185 | 40.15% |
| மகிந்த ராஜபக்ச | ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி | 6,015,934 | 57.88% |
| சன்ன ஜானக சுகத்சிரி கமகே | ஐக்கிய ஜனநாயக முன்னணி | 23,290 | 0.22% |
| மு. காசிம் முகமது இஸ்மைல் | ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி | 39,226 | 0.38% |
| விக்கிரபாகு கருணாரத்தின | இடது சாரி முன்னணி | 7,055 | 0.07% |
| ஏ.எஸ்.பி.லியனகே | சிறீ லங்கா தொழிற் கட்சி | 14,220 | 0.14% |
| சரத் மனமேந்திரா | நவ சிகல உருமய | 9,684 | 0.09% |
| எம். கே. சிவாஜிலிங்கம் | சுயேட்சை | 9,662 | 0.09% |
| லால் பெரேரா | எமது தேசிய முன்னணி | 9,353 | 0.09% |
| அச்சல அசோக சுரவீர | ஜாதிக சங்கவர்தன பெரமுன | 26,266 | 0.25% |
| மகிமன் ரஞ்சித் | சுயேட்சை | 18,747 | 0.18% |
| சிரிதுங்க ஜெயசூரிய | ஐக்கிய சோசலிசக் கட்சி | 8,352 | 0.08% |
| விஜே தாஸ் | சோசலிச சமத்துவக் கட்சி | 4,195 | 0.04% |
| இதுரூஸ் முகமது இலியாஸ் | சுயேட்சை | 6,131 | 0.06% |
| உக்குபண்டா விஜேக்கூன் | சுயேட்சை | 9,381 | 0.09% |
| முத்து பண்டார தெமினிமுல்ல | ஒக்கொம வெசியோ | 2,007 | 0.02% |
| சனத் பின்னாதுவ | தேசியக் கூட்டமைப்பு | 3,523 | 0.03% |
| உபாலி சரத் கொங்கஹகே | ஐக்கிய தேசிய மாற்று முன்னணி | 2,260 | 0.02% |
| முகமது முஸ்தபா | சுயேட்சை | 3,134 | 0.03% |
| பத்தரமுல்ல சீலாரதன தேரோ | ஜன சேதா பெரமுன | 2,770 | 0.03% |
| சேனரத்ன டி. சில்வா | Patriotic National Front | 2,620 | 0.03% |
| அருணா டி. சொய்சா | ருகுணு ஜனதா கட்சி | 2,618 | 0.03% |
| செல்லுபடியான வாக்குகள் | | 10,393,613 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | | 101,838 | |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | | 10,495,451 | 74.50% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | | 14,088,500 | |

### 5வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -2005

| வேட்பாளர் | கட்சி | வாக்குகள் | % |
|---|---|---|---|
| விமல் கீகனகே | சிறீ லங்கா தேசிய முன்னணி | 6,639 | 0.07 |
| சாமில் ஜயனெத்தி | புதிய இடது முன்னணி | 9,296 | 0.10 |
| அஜித் ஆராச்சிகே | ஜனநாயக ஐக்கியக் கூட்டமைப்பு | 5,082 | 0.05 |
| சிரிதுங்க ஜயசூரிய | ஐக்கிய சோசலிசக் கட்சி | 35,425 | 0.36 |
| நெல்சன் பெரேரா | இலங்கை முன்னேற்ற முன்னணி | 2,525 | 0.03 |
| விஜே டயஸ் | சோசலிஸ்ட் ஈக்குவாலிட்டி கட்சி | 3,500 | 0.04 |
| அனுரா டி சில்வா | ஐக்கிய லலித் முன்னணி | 6,357 | 0.07 |
| அருண டி சொய்சா | ருகுணு ஜனதா கட்சி | 7,685 | 0.08 |
| மகிந்த ராஜபக்ச | ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி | 4,887,152 | 50.29 |
| ரணில் விக்கிரமசிங்க | ஐக்கிய தேசிய கட்சி | 4,706,366 | 48.43 |
| அசோகா சுரவீர | ஜாதிக சங்கவர்தன பெரமுன | 31,238 | 0.32 |
| விக்டர் எட்டிகொட | எக்சத் லங்கா பொதுஜன பக்சய | 14,458 | 0.15 |
| எச்.தர்மத்வாஜா | ஐக்கிய தேசிய மாற்று முன்னணி | 1,316 | 0.01 |
| செல்லுபடியான வாக்குகள் | | 9,717,039 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | | 109,739 | |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | | 9,826,778 | 73.73% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | | [illegible] | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பா.அரியநேந்...

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினர் த.சிற்பரன் தேர்தல்கள் ஆணைக்குழுவில் கட்டுப்பணம் செலுத்தினார். (ம-7)

## இயக்கச்சியில்...

பளைப் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட இயக்கச்சிப் பகுதியில் வேலிக்கு தூண் நடுகை செய்தபோது மோட்டார் வர்க்க இரண்டு ஷெல்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் நேற்று திங்கட்கிழமை கிடங்கு வெட்டியபோது குண்டுகள் காணப்பட்டமை தொடர்பில் பளைப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

குண்டுகளை மீட்பதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-7,60)

## சொத்து...

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நாள் வரை ஒவ்வொரு ஆண்டுக்குமான சொத்துவிபரம் அதில் குறிப்பிடப்பட வேண்டும் என ஊழல் மற்றும் கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## கட்டுப்பணம்...

அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிட 16 வேட்பாளர்களும், வேறு அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிட ஒரு வேட்பாளரும், சுயேட்சை வேட்பாளராக 15 பேரும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கட்டுப்பணம் செலுத்தல் நாளை புதன்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவு பெறும். அத்துடன் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணி முதல் 11 மணிவரையான காலப் பகுதியில் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். (ம-7)

## 156 கிலோ...

பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சாவின் பெறுமதி சுமார் 42 மில்லியன் ரூபாய் எனப் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

## பலரது பினாமி...

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுயேட்சை வேட்பாளர்கள் குறித்து தவறாகக் கூறமுடியாது.

“ஜனாதிபதி ரணில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடுகிறார். அவர் இதற்கு முன்னர் தற்போதைய ஜனாதிபதி, முன்னாள் பிரதமர் மற்றும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் போன்ற பதவிகளை வகித்துள்ளார்”.

“எவ்வாறாயினும், எங்கள் அனுபவத்தின் அடிப்படையில், பல சுயேட்சை வேட்பாளர்கள் உண்மையில் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கு பினாமிகளாக செயற்படுகிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட கட்சியுடன் நேரடித் தொடர்பு கொண்ட மூன்று அல்லது நான்கு முன்னாள் எம்.பிக்கள் ஒரு சுயேட்சை வேட்பாளரை ஆதரிக்க வேட்புமனுக்களைச் சமர்ப்பித்துள்ளனர் என்பது தெளிவாகிறது என்றார். (ம-7)

## காங்கேசன்துறை...

அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன்துறை முகம் வரையிலான கப்பல் போக்குவரத்தை கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதி பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

பின்னர், புயல் மற்றும் வடகிழக்கு பருவமழை, குறைந்த அளவிலான பயணிகள் வருகை ஆகியவற்றைக் காரணம் காட்டி சேவை தொடங்கிய சில நாட்களிலேயே கப்பல் போக்கு வரத்து நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில், இலங்கைக்கு மீண்டும் கப்பல் போக்குவரத்து சேவை தொடங்க இருப்பதாக தனியார் கப்பல் நிறுவனம் அறிவித்தது.

மேலும், கப்பலில் பயணிக்க விரும்புகிறவர்கள் **sailindsri.com** என்ற அதிகாரபூர்வ இணையத்தளம் மூலம் நள்ளிரவு முதல் டிக்கெட் முன்பதிவு செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## சமஷ்டி...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் மற்றும் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில், பிரதானமாகத் தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாசைகளைத் தீர்க்கும் முகமான சமஷ்டி முறையான அரசியல் தீர்வு தொடர்ந்தும் தீர்க்கப்படாமல் இருப்பதனாலேயே பொது வேட்பாளர் என்ற முடிவு எட்டப்பட்டுள்ளது என்பது தெளிவுபடுத்தப்பட்டது. ஜனாதிபதி தரப்பில் சமஷ்டி முறையான அரசியல் தீர்வு என்பது பலம்மிக்க பாராளுமன்றம் ஒன்று அமையும் பட்சத்தில் அது சம்பந்தமாக பரிசீலித்து முன்னேற்றகரமான முடிவுகளை எதிர்காலத்தில் எட்ட முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதுவரைக்கும் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட மாகாண சபைக் கட்டமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காக தான் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அதற்காக தன்னிடம் தயாரித்து வைக்கப்பட்டிருக்கும் யோசனைகளடங்கிய ஆவணம் ஒன்றையும் சமர்ப்பித்தார். ஏற்கெனவே மாகாண சபையின் பறிக்கப்பட்ட அனைத்து அதிகாரங்களையும் மீள வழங்குவதாகவும், நிதி உட்பட மேலதிக அதிகாரங்களையும் பொருளாதார அபிவிருத்தி ஆணைக்குழுவையும் மாகாணசபை கொண்டிருக்கும் எனத் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் சார்பில், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, எஞ்சியுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு மற்றும் அபகரிப்பைத் தடுப்பது, தமிழ் இளைஞர்கள் யுவதிகள் நீதியற்ற முறையில் கைது செய்யப்படுவது, விசாரணை என்ற போர்வையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் அச்சுறுத்தல் நடவடிக்கையை நிறுத்துதல், இந்திய மீனவர்களுடைய அத்துமீறலினால் எமது மீனவர்கள் படுகின்ற துன்பம் உட்பட பல விடயங்கள் தீர்க்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டன.

இதற்கான தீர்வுகளை தான் நிச்சயமாக வழங்குவதாகவும் ஏற்கெனவே சில விடயங்களுக்கான தீர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக அரசியல் கைதிகள் விடுதலை மற்றும் தொல்லியல் விவகாரங்களைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தான் சமர்ப்பித்த ஆவணத்தில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன எனவும், அவற்றைப் பரிசீலித்த பின்னர் தொடர்ந்தும் சந்திப்புக்களை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

மக்களின் அரசியல் அபிலாசைகளை தீர்க்கும்முகமாக மேலதிக கலந்துரையாடல்களை நடத்துவதற்கு தமது தரப்பிலும் தயாராக இருப்பதாக சொல்லிய தமிழ் தரப்பினர், அவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் சம்பந்தமான விடயங்களை ஆராய்ந்து கருத்துத் தெரிவிப்பதாகக் கூறியதுடன் சந்திப்பு நிறைவடைந்தது. (ம-7)








































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழியனுப்பிட வாரீர்!




## திரு. தம்பிப்பிள்ளை வரதராஜா (B.Ed)

(அதிபர் - The Express Institute)

யாழ்/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் (1975 - 1982)
யாழ்/பலாலி ஆசிரியர் கலாசாலை (1982 - 1983)
யாழ்/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் (1984 - 1988)
யாழ்/நீர்வேலி றோ.க.த.க. வித்தியாலயம் (1989 - 1993)
யாழ்/மத்திய கல்லூரி (1993 - இளைப்பாறும்வரை)

**விடை எழுதவைத்த ஆசானுக்கு;**
**விடை கொடுக்கும் நேரமிது.**

இடம் : The Express Institute வளாகம்
காலம்: இன்று செவ்வாய்க்கிழமை ( 13.08.2024 )
நேரம்: பி.ப 01.00

தசாப்தங்கள் பலவாய் தன்பணியைச் செவ்வனவே ஆற்றிய ஆசானின் முன்னைநாள் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அவர்பால் அன்பு கொண்டுள்ள அனைத்து உள்ளங்களையும் நிறுவனமுன்றலில் ஒன்று கூடி, அன்னாரது புகழுடலை பேரணியாய் அழைத்துச் செல்வோம் வாரீர் !

**The Express Institute**
Irupalai Junction, Kopay.

(244)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.